இல்லறத்தில் ஆனந்தம்



தொகுப்பு : மீரா சண்முகம்

H.H. சுவாமி தயானந்த சரஸ்வதி

இல்லறத்தில் ஆனந்தம்

H. H. ஸ்வாமி தயானந்த சரஸ்வதி

தொகுப்பு மீரா சண்முகம்

வெளியீடு

ஆர்ஷ வித்யா பீடம்

புராணு ஜாடி

ரிஷீகேசம்

முதற்பதிப்பு: ஆகஸ்ட் 1987

தொகுப்பு திருமதி மீரா சண்முகம் ஹைதராபாத்.

பிரதிகள் கிடைக்குமிடம் :-

சுவாமி தயானந்த சரஸ்வதி கல்விக்குழு
மஞ்சக்குடி (அஞ்சல்)
612610
தமிழ்நாடு.

தாரா அச்சகம், நாகை,

SWAMI DAYANANDA SARASWATHI

PURANI JHADI
RISHIKESH
249201
INDIA

25-6

அனாதியான வேதத்தின் திருஷ்டி யில் மோக்ஷத்திற்காக இரண்டு மார்க்கங்கள் தான் இருக்கின்றன. ஒன்று துறவறம் மற்றொன்று இல்லறம் சில முக்யமான உண்மைகள் இல்லறத்தை மோக்ஷ மார்க்கமாக மாற்றுகின்றன. இந்த உண்மைகளை தெரிந்து வாழ்க்கையில் கடைப்பிடித் தால், மனித வாழ்க்கையின் குறிக் கோளை இங்கேயே அடையலாம். ஸ்ரீமதி மீரா சண்முகம் தன்னுடைய சாதனமாக நினைத்து தொகுத்த இந்த சிறு புத்தகம் எல்லோருக்கும் பயன்படட்டும்.

- தயானந்தா.

என்னுரை

சேலத்தில் சுவாமிஜியின் கீதா சொற்பொழிவு ஆங்கிலத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தது. அச்சமயம் சுவாமிஜியின் சொற்பொழிவைக் கேட்ட சில பெண்மணிகள், ஸம்சாரத்திலேயே உழன்று கொண்டிருக்கும் எங்களுக்கு ஞானம் பெற்று எங்கள் வாழ்க்கையை உயர்த்திக்கொள்வது எப்படி? நாங்கள் மோக்ஷம் பெறுவதற்கு என்னவழி? என்பதைத் தாங்கள் தயை செய்து தமிழில் கூறவேண்டும், என்று வேண்டிக் கொண்டார்கள்.

அப்போது தயா சொரூபமாகிய சுவாமிஜி, தாய்மார்கள் வேண்டுகோளுக்கு இணங்கி, கருணையோடு தமிழில் கூறியதே இந்தக் கர்மயோகம் "பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் காரணம் மனம்தான். இந்த மனதை நாம் எவ்விதம் வைத்துக்கொள்ளவேண்டும், அந்தக் கரணம் என்பது என்ன? கர்த்தா, கர்ம, கரணத்தின் விவேகம் என்பது என்ன? மனம் எப்படிக் கர்த்தாவாகின்றது. கரணமும் கர்த்தாவும் ஒன்று சேரமுடியாது, இந்தச் சேரமுடியாததைச் சேர்த்து வைக்கும் நிலையே அவிவேகம். இதனால் ஞானம் மூடப்பட்டுள்ளது. இந்த அவிவேகத்தை விலக்குவதற்கு, கர்த்தாவாகிய நாம், கரணமாகிய மனதை நம்கையில் எப்படி வைத்துக்கொள்வது?" என்பதை எளிய முறையில் சுவைபடக் கூறியுள்ளார் சுவாமிஜி.

ஆத்மாவிற்கு எவ்விதச் செயலும் கிடையாது. செயல் அற்ற ஆத்மா, அசங்கமான ஆத்மா தாமரை இலைத் தண்ணீரைப்போல் இருக்கின்றது. ராக துவேஷம்தான் ஆத்மாவை

அறிய முடியாமல் தடை செய்கின்றது. ஆகை யால் ராக துவேஷத்தின் வசம் ஆகாதே. இந்த ராக துவேஷம்,விலகக் கர்மத்தை ஈஸ்வர அர்ப் பணமாகச் செய்,பலனைப்பிரசாதமாக எடுத்துக் கொள். இதனால் சித்த சுத்தி ஏற்பட்டுச் சிர வணத்தின் மூலம், இல்லறத்திலேயே ஞானம் அடைந்து ஜீவன் முக்தனாய் ஆனந்தமாக வாழ லாம்'' என்று கூறியுள்ளார்.

இந்த ''இல்லறத்தில் ஆனந்தம்'' என்ற நூல் ஒன்றே ஜீவன் முக்தி பெறுவதற்கு போதும். குருவாக்கே சாஸ்திரம். ஆகையால் குருவின் வாக்கில் சிரத்தை வைத்து, ஞான சிகரத்தை அடையலாம். இவ்வளவு எளிய முறையில் சாஸ்திரத்தின் சாரத்தை இன்று மக்களுக்குப் போதித்து வாழ்ந்து காட்டுபவர் சுவாமிஜி. சாஸ்திரத்தின் சாரம் பூர்ணமாக நன்கு தெளிவாய் அறிந்து,பழுத்த அனுபவமுற்ற சுவாமிஜியின் ஞான அமிர்தம். இந்த ஞான அமிர்தத்தைப் பருகி, பிறவாமை பெறலாம்.

சுவாமிஜியின் போதனைகள் பல புத்தகங் களாக ஆங்கிலத்தில் வெளிவந்துள்ளன. சுவாமி ஜியின் போதனைகளைத் தமிழ் மக்களும் அறிந்து பயன் பெறும் வகையில், முதல் பிரயத்தனமாக இந்நூல் குருநாதர் திருவருளால் வெளிவரு கின்றது, வாழ்க்கையின் உண்மையை அறிந்து கொள்ள விரும்பும் அனைவரும் இதைப் பயன் படுத்திப் பெரும் பேறுபெறப் பிரார்த்திக் கின்றோம்.

மீரா சண்முகம்,
ஹைதராபாத்.

சுவாமி தயானந்த சரஸ்வதி


ஆதி சங்கரர் வழி நின்று அத்வைத ஞானத்தினை அனைத்துலகிலும் பரப்பி வரும் சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் கல்வி கேள்விகளிலே மிகச் சிறந்து விளங்கும் பிரஹ்ம நிஷ்டாபரராக விளங்கிடும் மகான் ஆவார்.

வேத நெறி போற்றிடும் சீலமிக்க குடும்பத்தில் தஞ்சை மாவட்டம் மஞ்சக்குடி என்னும் புனித ஸ்தலத்தில் அவதரித்த சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் இளம் வயதிலேயே சம்ஸ்கிருதத்தையும் நம் புனித நூல்களையும் கற்றுத் தேர்ந்தார், நம் சுவாமிஜி அவர்கள் சுவாமி தாரகானந்தா ஸ்வாமி ப்ரணவானந்தா ஆகியோரிடம் உன்னதமான வேதாந்தப்பயிற்சி பெற்றார். பகவத்கீதை, உபநிடதங்கள், ப்ரஹ்ம சூத்திரம், ஆகியவற்றை எளிமையாகவும் தெளிவாகவும் கற்பிக்கும் ஆற்றல் மிகு ஞானசிரியராகிய சுவாமிஜி அவர்கள் எண்ணிறந்த நூல்களைப் பதிப்பித்துள்ளார்கள். மேலை நாடுகளில் நம் பெருமைமிகு பண்பாட்டினைப் பரப்பிடும் பெருந் தொண்டில் ஈடுபட்டுள்ள நம் சுவாமிஜி அவர்கள் ரிஷிகேசத்தில் கவினுறு கங்கைக்கரையில் புரானிஜாடி என்னுமிடத்தில் மிகச் சிறந்த ஆசிரமம் ஒன்று அமைத்துள்ளார்கள். ஆர்ஷவித்யா பீடம் என்னும் அந்த ஆசிரமம் வேத நெறி தழைக்கப் பாடுபடும் பல ஞானிகளாகிய துறவிகள் வாழுமிடமாகவும் பல இளந்தலைமுறையினருக்கு ஞானப்பயிற்சியளிக்கும் ஆலயமாகவும் விளங்குகிறது.

நம் குருநாதராம் சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்கள் தற்போது அமெரிக்காவில் ஒரு வேதாந்தப்பயிற்சி நிலையத்தைத்தொடங்கி மூன்றாண்டுக்காலம் சுமார் ஐம்பது வித்யார்த்திகளுக்கு வேதாந்த பாடம் போதிக்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டிருந்தாலும் ஆண்டுக்கிருமுறை அனைத்து நாடுகளிலும் சுற்றுப்பயணம் செய்து வேதாந்த வேள்விகளை நடத்தி வருகின்றார். ஆதி சங்கரரின் மறு அவதாரமென அன்பர்கள் போற்றிப் பரவிடும் சுவாமி தயானந்த சரஸ்வதி அவர்களை சற்குரு நாதராக அடைந்து அவர்களுடைய இன்னருள்பெற்று வாழும் பேறு இறைவன் நமக்களித்த பெரும் பேறாகும்.

குருவே! போற்றி! போற்றி!!

சண்முகம்,
ஹைதராபாத்.



இல்லறத்தில் ஆனந்தம்

அந்தக் கரணம் (மனது) என்பது என்ன?

மனம் என்று சொல்லுவதற்கு சமஸ்கிருதத்தில் **அந்தக் கரணம்** என்று பெயர். அந்தக் கரணம் என்பது விருத்தி ரூபமாக இருக்கிறது. விருத்தி என்றால் என்ன? எதை நாம் பார்க்கிறோமோ, கேட்கிறோமோ, தொடுகிறோமோ, அது மனத்திற்கு விஷயமாகிறது. உதாரணமாகக் குடத்தைப் பார்க்கும் போது குடம் என்ற வஸ்துவின் ஸ்தூல(வடிவம்)மனத்தில் எண்ண வடிவமாக ஆகும் போது குடம் என்ற விருத்தி ஏற்படுகிறது (என்கிறோம்) இந்தக் குடவிருத்திக்கு விஷயம் என்ன? குடம். இதே போலப், படம் (துணி) மடம் முதலியவைகளும் அவைகளின் விருத்திகளுக்கு முறையே விஷயங்களாகும். இவ்வாறு ஒவ்வொரு விருத்திக்கும் ஒவ்வொரு விஷயம் ஏற்படும். இந்த விஷயங்கள் எப்போதும் மாறிக் கொண்டே இருப்பதால் எண்ணங்கள் மாறுகின்றன. இந்த எண்ணங்களின் மாறுதல்களுக்குப் பொதுவாக விருத்தி என்று பெயர். மனோவிருத்திகளின் மூலமாகவே நமக்கு வெளியுலக வஸ்துக்களுடன் தொடர்பு ஏற்படுகின்றது. விருத்தி ஏற்படவில்லையென்றால் வஸ்து நம் முன்னால் இருந்தாலும் அதை நாம் பார்ப்பதில்லை. அதாவது அது மனத்திற்கு விஷயமாவதில்லை.

அந்தக் கரணத்தின் செயல்கள்:

அந்தக் கரணத்தினுடைய வெவ்வேறு கிரியைகளை வைத்து அதை மனம், புத்தி, சித்தம் என்று கூறுகிறோம், இவை ஒரே மனத்தின் பல்வேறு செயல்கள். சாதாரணமாக, எல்லாவிதமான எண்ணங்களுக்கும் மனம் என்றவார்த்தையையே பயன்படுத்துகிறோம். ஆனால் இந்த ஒரே மனம் எவ்விதம் மூன்று விதமான கிரியைகளைச் செய்கின்றது என்று பார்ப்போம்.

மனம்:

சங்கல்ப விகல்பங்களோடு கூடிய எண்ணங்களுக்கு மனம் என்று பெயர். சங்கல்பம் என்பது ஒன்றைப் பற்றி நினைப்பது. இதற்கு மாறாக எண்ணுவதற்கு விகல்பம் என்று பெயர். உதாரணமாக, வெளியே போகும் போது கதவைப் பூட்டி விட்டுப் போவோம். கொஞ்ச தூரம் சென்றதும், கதவைப் பூட்டினேனா இல்லையா என்ற சந்தேகம் வரும். 'கதவைப் பூட்டி விட்டேன்' என்று நினைப்பது சங்கல்பம். 'கதவைப் பூட்டவில்லை' என்று நினைப்பது விகல்பம். இதேபோல ரஸத்திற்கு உப்புப் போட்டுவிட்டேனா, இல்லையா என்று நினைக்கும் போது 'உப்புப் போட்டு விட்டேன்' என்று நினைப்பது சங்கல்பம். 'உப்புப் போடவில்லை என்று நினைப்பது விகல்பம்'. இம்மாதிரி சங்கல்ப விகல்பங்கள் மனத்தில் மாறி மாறி ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. இவ்விதம் சங்கல்பம் விகல்பம் இரண்டோடும் கூடி நிச்சயமற்ற, சந்தேகமான நிலையில் இருக்கும் எண்ணங்களுக்கு மனம் என்று பெயர். ஆசை, கோபம், பொறாமை, அசூயை, பாசம், கருணை இம்மாதிரியான எண்ணங்கள் எல்லாம் மனத்தின் கீழ் வரும்.

புத்தி:

இது குடம், இது படம் என்ற நிச்சயமான எண்ணம் இருக்கும் போது ஏற்படும் விருத்திக்கு, புத்தி என்று பெயர், மேலே சொன்ன உதாரணத்தில், கதவைப் பூட்டினேனா, இல்லையா என்ற நிலையில் மனம் இருக்கும் போது, சிந்தனை செய்து, விகல்பமில்லாமல் 'கதவைப் பூட்டி விட்டேன் என்று நிச்சயம் செய்யும் போது புத்தி செயல்படுகிறது. விசாரம் செய்யும் போது ஏற்படும் விருத்திகளுக்குக் கூட, புத்தி என்று கூறலாம். ஒரு விஷயத்தைத் தெரிந்து கொள்வதற்காக ஆராய்ச்சி செய்வது விசாரம் எனப்படும்.

சித்தம்:

சித்தம் என்பது நாம் முன்பு அனுபவித்த எண்ணங்களின் நினைவுகளாகும். சித்தம் என்று சொல்வது நினைவுருபமாக இருக்கக்கூடிய விருத்திகள்.

மனம், புத்தி, சித்தம் என்ற மூன்றும் சேர்ந்தது அந்தக் கரணம்.

அந்தக் கரணம் ஒரு கருவி:-

எதை வைத்து நாம் ஒன்றை அடைகின்றோமோ அதைக் கரணம் என்கிறோம். நடந்து செல்வதற்குக் கால்கள் கரணங்களாக இருகின்றன. ஒரு வஸ்துவை எடுப்பதற்குக் கைகள் கரணங்களாக இருக்கின்றன. வஸ்துவைப் பார்ப்பதற்குக் கண்கள் கரணங்களாக இருக்கின்றன. கர்மாக்களைச் செய்ய உதவியாக இருக்கும் கை, கால் முதலிய கரணங்கள் கர்மேந்திரியங்கள். அதாவது, கர்மாக்களைச் செய்யக்கூடிய கரணங்கள், உலகத்தை அறிய உதவியாக இருக்கும் கரணங்களான

ஐம்புலன்களை ஞானேந்திரியங்கள் என்று சொல்கிறோம். இவையாவும் நம் ஸ்தூல தேகத்தில் இருப்பவை.

கரணங்களுக்கு உதவியாகச் செயல்படும் வெளிக் கருவிகளே உபகரணங்கள். தொலை தூரத்தில் உள்ள வஸ்துவைப் பார்க்கக் கண்ணுக்கு உதவியாக இருப்பது டெலஸ்கோப் என்னும் உபகரணம். இதேபோல் கண்ணுக்குக் கண்ணாடியானது உபநேத்ரம் என்ற உபகரணமாகும்.

மேற்கூறிய இந்திரியங்களுக்கு எல்லாம் தானாக வேலை செய்யும் சக்தி இல்லை. மனத்தோடு கூடி இருந்தால் தான் அவைகள் வேலை செய்யும். மனம் எங்கோ இருந்தால் கண் பார்க்காது, காது கேட்காது. உதாரணமாக, ஒரு வகுப்பில் ஆசிரியர் கணக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். பாடம் முடிந்ததும், ஒரு பையனைப், பார்த்து, 'என்னப்பா, எல்லாம் நுழைந்ததா?' என்று கேட்டார். மேல் கூரையின் உள்ளே நுழைந்து கொண்டிருந்த எலியைப் பார்த்துக் கொண்டிருந்த அந்தப் பையன் உடனே 'எல்லாம் நுழைந்தது வால் மட்டும் பாக்கி உள்ளது' என்று பதில் கூறினான். இதிலிருந்து என்ன தெரிகிறது? அவனுடைய மனதானது மேலே இருந்ததினால் காது இங்கே இருந்த போதிலும் காதிற்குக் கேட்கும் சக்தி இல்லாமல் போய்விட்டது. எனவே மனம் ஒரு கரணம் தான் என்று தெரிகிறது. மனத்தில் எந்த விருத்திகள் ஏற்படுகின்றனவோ அவைகளைத் தான் நாம் பார்க்கின்றோம், கேட்கின்றோம்.

மனம் 'பார்' என்றால் தான் கண் பார்க்கின்றது. யாராவது பேசிக்கொண்டிருந்தால் காது அதை ஒட்டுக் கேட்கும். இவன் மனம் காதில் இருப்பதால் விஷயத்தைக்

கேட்கிறான். மனதானது காதை உபயோகிப்பதால் மனம் கரணம் ஆகின்றது. இதிலிருந்து, வெளியில் இருக்கும் கை, கால், கண், காது முதலான வெளிக் கரணங்கள் உள்ளே இருக்கும் மனம் என்ற கரணத்தின் கையில் தான் இருக்கின்றன என்று தெரிகிறது.

மேற்கொண்டு, 'இது பானை' 'இது துணி' என்று தெரிந்துக்கொள்ளுவதற்குப் புத்தியானது ஒரு கரணமாக அமைந்திருக்கிறது. இதனால் புத்தியும் ஒரு கரணம் தான்.

'நீ என்ன சாப்பிட்டாய்' என்று கேட்கும் போது அங்கு மனம் சித்தமாக மாறுகிறது. முன்பு நாம் சாப்பிட்டதை நினைவுபடுத்திக் கூறுவதற்கு உரிய காரண மாக சித்தம் இங்கு உள்ளது

இதே போல, இச்சை, சங்கல்பம் விகல்பம் யாவும் கரணங்களாக இருக்கின்றன. எனவேதான் இவை களுக்கு அந்தக்கரணம் (உள்ளிருக்கும் கருவி) என்று பெயர்.

ஆனால் இந்த அந்தக் கரணத்தை நாம் கருவியாகப் பார்ப்பதில்லை. அந்தக் கரணத்தையே 'நாம்' என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். அப்படி இல்லை. இதுவும் நமக்குக் கரணம் தான். கரணத்திற்குத் தானாக ஒரு கார்யமும் செய்ய முடியாது. கரண்டிக்குத் தானாகப் பரிமாறும் சக்தி கிடையாது. கரண்டியை யாராவது கையில் எடுத்து உபயோகித்தால் தான் உதவும். உபயோகமாகும் இந்தக் கரண்டி, யார் கையில் உள்ளதோ அவன் கர்த்தா. இதைப் போலவே, அந்தக் கரணத்தைக் கரணம் என்று சொல்லும் போது மனம்,

புத்தி, சித்தம் என்ற இவைகள், இவைகளை உபயோகப் படுத்தும் கர்த்தாவின் கையில் தான் இருக்கின்றன என்று பொருள்.

கர்த்தா--கர்ம--கரண விவேகம்:-

கர்த்தா, கரணம், கர்ம என்ற மூன்று விஷயங்களைப் பற்றி நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும். 'கர்ம' என்றால் வஸ்து. இப்போது நீங்கள் எதைப் பார்க்கிறீர்களோ அது 'கர்ம' எனப்படும். எதனால் பார்க்கிறீர்களோ அதற்குக் 'கரணம்' என்று பெயர். யார் பார்க்கிறானோ அவனுக்குக் 'கர்த்தா' என்று பெயர். இவைகளை விரிவாகப் பார்ப்போம்.

நான், நீ என்பன முதல் வேற்றுமையைக் குறிக்கும் 'உன்னை' என்று சொல்லும்போது 'ஐ' என்பது இரண்டாவது வேற்றுமை உருபு. உன்னோடு, உன்னால், உன்னுடன் என்று கூறும்போது, 'ஆல், ஒடு உடன்' என்ற விகுதிகள் மூன்றாவது வேற்றுமையைக் குறிக்கும். 'உனக்காக' என்றால் அது நான்காவது வேற்றுமை. இவ்விதம் எட்டு வேற்றுமைகள் இருக்கின்றன. இதில் நான், நீ என்று சொல்லப்படும் முதல் வேற்றுமைக்குக் கர்த்தா என்று பெயர். செயலைச் செய்கிறவன் கர்த்தா ஆகிறான். காரணமாக இருப்பதற்கு 'ஆல்' ஒடு, உடன் என்பது அர்த்தம். 'உன்னால் என்று சொல்லும்போது 'ஆல்' என்பது கரணத்தைக் குறிக்கிறது. உதாரணமாக, 'நெருப்பினால் சமையல் செய்கிறான்' என்று கூறும்போது சமைப்பதற்கு நெருப்பு காரணமாகிறது. 'காலினால் நடக்கிறான் என்று சொன்னால் கால் கரணமாக அமைகிறது. யாருக்குக் கரணமாக இருக்கிறது? யார் நடக்கிறாரோ அவனுக்குக் கரணமாக

இருக்கிறது. அவன் 'நட' என்ருல் கால்கள் நடக்கின்றன. அவன் 'தூக்கு' என்ருல் கைகள் தூக்குகின்றன. இவைகள் தானாக ஒன்றும் செய்வதில்லை. இவைகளை யாரோ ஒருவன் உள்ளிருந்து செய்ய வைக்கிருன். எவனுடைய கையில் இந்தக் கரணங்கள் இருக்கின்றனவோ அவன் தான் 'கர்த்தா' எனப்படுகின்ருன். அவனுக்குத் தான் 'நான்' என்று பெயர். கரணம் என்று சொல்லும்போது மனம், புத்தி, சித்தம், என்ற மூன்றுமே கரணமாகின்றன. இது அந்தக் கரணம் கை கால்கள் முதலியன வெளிக் கரணங்கள். உபநேத்ரம் (கண்ணுடி) முதலானவை உபகரணங்கள்.

இந்த உபகரணங்களினுலும், கரணங்களினுலும் நாம் எதை அடைகின்ருேமோ அதற்கு 'கர்ம' என்று பெயர். 'நான் (கால்களினுல் நடந்து) கிராமத்திற்குச் சென்றேன்' என்று சொல்லும்போது, 'சென்றேன். என்ற வினைச் சொல்லுக்குக் கர்மாவாக இருப்பது கிராமம். அதாவது 'எங்கே சென்ருய்' என்ற கேள்விக்குப் பதிலாக வருவது 'கர்ம'. எவன் சென்ருனே அவன் கர்த்தா. இங்கு 'நான்' என்பது கர்த்தா' எப்படிச் சென்றேன்? கால்களினுல் நடந்து சென்றேன். இந்த கால்கள் கரணம், 'சைக்கிளினுல் சென்றேன். என்ருல் சைக்கிள் உபகரணமாகிறது. எனவே ஒரு கிரியையினுல் எதை அடைகின்ருேமோ அதற்குப் பெயர் 'கர்ம'. இதை ஆங்கிலத்தில் (object) என்று கூறுவார்கள்.

இதில் 'நான்' எனப்படுவது கர்த்தாவா, கர்மாவா, கரணமா என்று பார்க்க வேண்டும். முதலில் தேகத்தை எடுத்துக் கொள்வோம். நமக்கு இந்தத் தேகம்

கர்த்தாவா? கரணமா? கர்மமா? தேகம் கர்மமாகவும் கரணமாகவும் இருக்கிறது. ஏனெனில் இந்தத் தேகம் மெலிந்து விட்டது', 'பருத்து விட்டது' 'வயதடைந்து விட்டது' என்றெல்லாம் கூறும்போது நான் தேகத்தைப் பார்த்துத்தானே கூறுகின்றேன். அதனால் தேகம் பார்க்கப்படும் வஸ்துவாக இருக்கிறது. தேகத்தைப் பார்ப்பதில் கண்ணும் மனமும் கரணங்களாக இருக்கின்றன. எனவே பார்க்கப்படும் தேகம் பார்க்கும் கர்த்தாவாக இருக்க முடியாது. அதேபோல இந்திரியங்களும் கரணங்களாகவும், கர்மங்களாகவும் இருக்கின்றனவேயன்றி அவைகளும் கர்த்தாவாக இல்லை.

சில விஷயங்களை நாம் மனத்தினாலும் பார்ப்பதுண்டு புகையைப் பார்த்து நெருப்பு இருப்பதாய்க் கூறுகிறோம். இங்கு புகைக்கு 'லிங்கம்' என்று பெயர். எதை வைத்து நாம் இன்னொன்றைத் தெரிந்து சொல்கிறோமோ அதற்கு 'லிங்கம்' என்று பெயர். இங்கு கரணமாகிற கண்களினால் புகையை மட்டும் பார்த்துவிட்டு, அங்கு நெருப்பு இருப்பதாக அனுமானம் செய்கிறோம். இந்த நெருப்பு மனத்தினால் பார்க்கப்படுவதால் மனமும் கரணமாகிறது. எனவே அனுமானம் என்பதும் ஒரு கரணம் தான்.

உதாரணமாக ஒருவர் நம் வீட்டிற்கு வந்து, கதவைத் தட்டினால் நாம் 'யார்'? என்று கேட்போம். 'நான், தான்' என்று அவர் பதில் குரல் கொடுப்பார். அந்த சப்தத்தை வைத்துக் கொண்டு, 'இவர்' இன்னார் என்று மனத்தில் தீர்மானம் செய்து கதவைத் திறப்போம் இது அனுமானம் எனப்படும். இங்கு அவர் குரல்

லிங்கமாகிறது. நாம் லிங்கத்தை வைத்து பூஜை செய்வதும் இதே மாதிரிதான். ஆண்டவனுக்கு இது 'லிங்கமாக இருக்கட்டும்' என்று லிங்க வடிவத்தைப் பூஜை செய்கிறோம். நாம் பூஜை செய்வது எல்லாமே லிங்கம்தான். படங்கள், பிரதிமைகள் இவை எல்லாமே லிங்கம் தான். ஏனென்றால் இவைகள் எல்லாவற்றின் மூலமாகவும் நாம் ஆண்டவனையே பூஜை செய்கிறோம். இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால் நாம் மனத்தினால் மட்டும் சில சமயங்களில் விஷயங்களைப் பார்ப்பதால் மனதும் ஒரு கரணமாக இருக்கிறது என்பதே. கரணமாக இருக்கும் மனது கர்த்தாவாக முடியாது. கர்த்தா தான் கரணமாக மனதை உபயோகப்படுத்த வேண்டும். இப்போது எப்படி இருக்கிறது என்றால கர்த்தரவான இவன் கரணங்களை உபயோகப்படுத்துவதற்கு பதில் இவனைக் கரணங்கள் உபயோகப்படுத்துகின்றன. நாம் கரண்டியால் பரிமாறு கிறோம். கரண்டியே சாப்பிட ஆரம்பித்தால் அது எவ்விதம் கரணமாகும்? கரண்டி கர்த்தாவாக மாறிவிடும். அதன் விளைவுகள் விபரீதமாக இருக்கும். நாம் 'கர்த்தா யார்' என்று தெரிந்து கொள்ளாமல் கரணமாகிற மனத்தையே நாம் என்று நினைத்துக் கொண்டுவிட்டதால் தான் மனத்தின் கையில் சிக்கித் தவிக்கிறோம். எனவே, தேகேந்திரிய மனங்களாகிற கர்ம, கரணங்களுக்கு வேறு பட்ட 'கர்த்தா யார்' என்று விசாரம் செய்வதற்கு முன்னால் மனம் எப்படி கர்த்தாவாகிறது? நமக்கு மனத்துடன் எந்தவிதமான தொடர்பு இருக்கிறது? என்பவைகளைப் பார்ப்போம்.

மனம் எப்படிக் கர்த்தாவாகிறது?

'நான்' என்பதின் பொருளான ஆத்மாவிற்கு—தேகம்

என்பது கர்மமாகவும், மனதானது கரணமாகவும் இருக்கிறது. இந்த உலகத்தை நாம் கண், காது, மனம், முதலிய கரணங்களை (வைத்துத்)தெரிந்து கொள்வதைப் போல, தேகத்தையும் தெரிந்து கொள்கிறோம். அப்போது தேகம், கர்மா மனம் கரணம். மனத்திலுள்ள எண்ணங்களைப் பார்க்கும்போது எண்ணங்கள் கர்மாவாகிறது. (பார்க்கப்படும் வஸ்து) அதைப் பார்க்கும் சக்தி இவனுக்குள்ளது. ஏதோ ஒரு சக்தியால் இவன் தன் மனத்தில் உள்ளதைப் பார்க்கிறான். இந்த நிலையில் இவன், கரணமாகவும் கர்மமாகவும் உள்ள மனத்தைக் கவனிப்பது இல்லை. அதைப் பற்றி அறிந்துக்கொள்ள முயற்சிப்பதும் இல்லை. அதனால் மனம் கர்த்தாவாக மாறிவிடுகின்றது.

'என் மனம் துக்கப்படுகின்றது. நான் துக்கத்தில் இருக்கிறேன்' என்று பலர் கூறக் கேட்கலாம். இங்கு, துக்கப்படுகின்ற 'மனதும்', என் மனம் துக்கப்படுகின்றது. நான் துக்கத்திலிருக்கிறேன்' என்று சொல்கிற கர்த்தாவான 'நான்' என்பதும் ஒன்று சேர்ந்து விடுகிறது. இதனால் தான் நான் 'துக்கி (துக்கமுள்ளவன்) என்று சொல்கிறான். மனம் கஷ்டப்பட்டால் இவனுக்கு என்ன? அது கஷ்டப்படட்டுமே. ஆனால், 'மனம் கஷ்டப்படுகிறது என்றால் நான் துக்கி தானே. நான் துக்கத்தை அடைகிறேனே' என்று முறையிடுவான். கரணம் ஆன மனம், கர்த்தாவான நான் என்ற இரண்டும் ஒன்று சேரும்போது இவனுக்கு துக்கம் ஏற்படுகிறது. சற்று சிந்தித்துப் பார்த்தால், இருளும், ஒளியும் கூட முடியாதது போலக், கரணமும் கர்த்தாவும் ஒன்று சேரவே முடியாது. கர்த்தாவின் கையில் உள்ளது கரணம். சேர முடியாத இந்த இரண்டும்

ஒன்று சேர்ந்தன என்ருல் அது அவிவேகத்திஞல் ஏற்படுவதேயாகும். விவேகம் இருந்தால் இவை ஒன்று சேரா. விவேகம் இல்லாவிட்டால், ஒன்று சேருவதற்கு வழி இல்லாவிட்டாலும் எப்படியோ சேர்ந்து விடும். இதுவே அவிவேகம் எனப்படும். விவேகம் இல்லாததிஞல், கரணத்தைக் கர்த்தாவாக நினைக்கின்ருன். இதஞல் மனத்திற்கு வரும் கஷ்டங்கள் எல்லாம் இவனுக்கு வருவதாக நினைக்கிருன். தனக்கு துக்கம் ஏற்பட்டுள்ளது என்று நினைப்பதால், 'நான் அசாந்தன் (சாந்தி அற்றவன்) என்று சாந்தியைத் தேடுகிருன். சாந்தியைத் தேடி, சினிமா, போதை தரும் வஸ்துக்கள், இவைகளை நாடிச் செல்வான். அங்கும் அவனுக்கு சாந்தி கிடைக்காது.

சொர்க்கத்திற்குப் போனுலும் அங்குள்ளவர்களுக்கும் துக்கம் உண்டு. அங்கு கர்ம தேவர்கள் என்று ஒருவகைத் தேவர்கள் இருப்பார்கள். அவர்களின் சுகத்தைக் காட்டிலும் நூறு பங்கு சுகம் தேவர்களுக்கு உண்டு. தேவர்களைவிட 100 பங்கு சுகம் இந்திரனுக்கு உண்டு. இந்திரனைவிட தேவகுருவான பிருஹஸ்பதிக்கு 100 பங்கு அதிக சுகம் உண்டு. அவரை விட பிரஜாபதிக்கு இன்னும் 100 பங்கு அதிக சுகம் உண்டு. இதைப்போல, சுகத்தில் அங்கும் தாரதம்யம் உள்ளது. எங்குமே சுகம் இல்லை. எனவே யாகாதி கர்மாக்களைச் செய்து சொர்க்கத்திற்குப் போனுலும் நிரந்தர சுகம் கிடைக்கவே கிடைக்காது. ஆதலிஞல் இவன் தன்னிடம் வந்தால்தான் சுகம் கிடைக்கும். வெளியில் சென்று வீட்டிற்கு வந்தால் தான் சுகம். இதுவே விஸ்ராந்தி. பறவைகள் கூட்டிற்கு வந்து சேர்ந்தால்தான் சுகம்.

கடையில் சுகத்தைத் தேடி இவன் (சாமியாரிடம்) மஹான்களிடம் செல்வான். அவர் உண்மையை அறிந்த மஹாபுருஷராக இருந்தால் 'உன்னிடமே சாந்தியும், சுகமும் உள்ளது. நீயே சாந்த ஸ்வரூபன். நீயே சுகஸ்வரூபன். இதை அறிந்து கொள் என்று அவனைத் திருப்பி விடுவார். நாம் நிரந்தர சுகம் அடைய வேண்டுமானால் நம்மிடமே திரும்பி வரவேண்டும். நம்முடைய மனத்தைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். 'மனதானது என்னுடைய கரணம். நான் அதன் கர்த்தா' என்று அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த மனத்திற்கு மூன்று விதமான காரியங்களைச் செய்யக் கூடிய சக்தி உள்ளது. ஞான சக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி என்பவை அவை. ஒன்றைப் பற்றி அறிந்து கொள்ளக் கூடிய சக்திக்கு 'ஞான சக்தி' என்று பெயர். இது ஞானத்தை அடைவதற்கான சக்தி. எல்லோருக்கும், இந்த ஞான சக்தி உண்டு. உலக விஷயங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளும் போது, அவைகளை அடைய வேண்டுமென்றோ, அல்லது தவிர்க்க வேண்டுமென்றோ ஒரு இச்சை மனத்தில் ஏற்படுகிறது. இது வேண்டும்' 'இது வேண்டாம்' என்ற இந்த இச்சிக்கக் கூடிய சக்தியும் -- இச்சா சக்தியும் -- எல்லோருக்கும் உண்டு. மேஜை ஜடமானதினால் அதற்கு இச்சா சக்தி இல்லை. ஆனால் மனத்திற்கு இச்சா சக்தியுள்ளது. அதைச் சக்தியாக நாம் உபயோகப்படுத்திக் கொள்கிறோம். இச்சிப்பதில் தவறு ஒன்றும் இல்லை. இச்சைகள் தர்ம அதர்மங்களுக்கு உட்பட்டு இருக்க வேண்டும். நம்முடைய இச்சைகளை நிறைவேற்றிக் கொள்ள கிரியா சக்தியும் நம்மிடம் உள்ளது. ஞான சக்தி, இச்சா சக்தி,

கிரியா சக்திகளோடு கூடியது நான் என்ற ஆத்மா. இவைகளை நாம் உபயோகப்படுத்திக் கொள்ளத் தெரிந்து கொள்ள வேண்டும். இது தெரியா விட்டால் தான் கஷ்டம் ஏற்படுகின்றது.

நாய் வாலை ஆட்டினால் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் வால் நாயை ஆட்டினால் எப்படி இருக்கும். குரங்காட்டி குரங்கினால் ஆட்டப்படலாமா? அதுபோல, இவன் 'நான் கஷ்டப்படுகிறேன்' என்று சொன்னால் என்ன அர்த்தம்? இவன் தன் மனத்தை ஆட்டாமல், மனம் இவனை ஆட்டுகிறது என்று தான் அர்த்தம். மனம் நம் வசத்தில் இருக்க வேண்டும். கரணமான மனத்தினால் நாம் ஆட்டப்படாமல் இருக்க வேண்டும். பெரும்பாலும், நாம் இச்சிக்கும் போதும், இச்சைகளைப் பூர்த்தி செய்யச் செயல்படும்போதும் மனத்தைக் கரணமாகத் தான் உபயோகிக்கின்றோம். ஆனால் சில சமயங்களில் அவிவேகத்தினால் கரணம் கர்த்தாவாக மாறிவிடுகிறது. கை, கால், கண், காது முதலியவைகளை எப்படி நாம் அவைகள் கரணங்கள் என்று நன்கு தெரிந்து உபயோகப்படுத்துகிறோமோ அதே போல இந்த மனத்தையும் கரணமாகத் தெரிந்து நன்கு உபயோகப்படுத்தினால் நம்மை மனம் கஷ்டப்படுத்தாது. கர்த்தாவாகிய நம்முடைய கையில் மனம் கரணமாக இருக்குமே தவிர துக்கத்தைக் கொடுக்காது.

இந்து மதத்தின் சிறப்பு:- வேதாந்த போதனை:-

கர்த்தா—கர்ம—கரணத்தைப் பற்றிய விவேகம் இல்லாமையால் வாழ்க்கையில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன

என்று பார்த்தோம். கர்ம கரணங்களாகிற தேகம், இந்திரியங்கள், மனம் இவைகளும், அவைகளின் வஸ்துக்களும் அனாத்மா என்று சொல்லப்படுகிறது. கர்த்தாவாக நடிக்கும் (இந்த நடிப்பைப் பற்றிப் பின்னால் பார்ப்போம்) 'நான்' என்ற வஸ்து ஆத்மாவாகும். இந்த நான் என்ற ஆத்மவஸ்துவைப் பற்றிய அறிவு நமக்கு இல்லாததினால் மனத்திற்கும்,நான் என்பதற்கும்,தாதாத்மியம்(சேர்க்கை) ஏற்பட்டுக் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. நம்முடைய சாஸ்திரங்கள், 'நான்' என்ற வஸ்துவைப் பற்றிய உண்மையான அறிவைப் போதித்து அதன் மூலம் ஆத்ம-அனாத்ம அவிவேகத்தைப் போக்குகின்றன. அதனால் அவிவேக கார்யமான உள்ளக் குழப்பங்களும், மனக் கஷ்டங்களும் நீங்கி, நம்முடைய ஸ்வரூபமான சாந்தியை நாம் திரும்ப அடைகிறோம். மேற்சொன்ன விவேகம் ஒருவனுக்கு இல்லாவிட்டால், அவன் எங்கு, எப்படி இருந்தாலும் கஷ்டம் தான். அவன் குறைவற்ற செல்வம், மனைவி, மக்கள், பதவி ஆற்றல் அழகு இவைகளைப் பெற்றிருந்தாலும், அல்லது இவைகள் இல்லாமல் தனித்திருந்தாலும் அவனால் மனக் கஷ்டங்களைத் தவிர்க்க முடியாது.

வாழ்க்கையின் உண்மையான 'நான்' என்ற வஸ்துவைப் பற்றிய அறிவைத் தரும் வேதாந்தம் தான் இந்து மதத்தின் சிறப்பு அம்சம். வாழ்க்கையின் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது நமது சனாதன தர்மம். சனாதனம் என்றால் எப்போதும் உள்ளது என்று பொருள். அது ஈசுவரனுடைய தர்மமே. இயேசு கிறிஸ்து பிறந்த பின்பு வந்தது கிறிஸ்தவ மதம். முகமது தோன்றிய பின்பு வந்தது

இஸ்லாமிய மதம். இந்து மதம் எப்போது வந்தது என்றே தெரியாது. ஏனென்றால் அவை வாழ்க்கையின் உண்மைகளைப் பற்றிக் கூறுகின்றன. அந்த உண்மை என்றும் மாறாது. ஆகையால் இந்து மதம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வரவில்லை அது அனாதி. அதாவது ஆரம்பம் அற்றது. அதில் ரிஷிகள் தான் இருக்கிறார்கள். தத்துவங்களுக்கு ஆரம்பம் இல்லை. வாழ்க்கையின் உண்மைகளை ஒட்டி இருப்பது தத்துவங்கள். இது மூட நம்பிக்கை இல்லை.

வேறு மதங்களில் நம்பிக்கைக்கே இடமுண்டு. கிறிஸ்துவை நம்பினால் பாபம் போகும். அதனால் கிறிஸ்துவை நம்ப வேண்டும். இஸ்லாமிய மதமும் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது. நம்முடைய சாஸ்திரங்களிலும் சொர்க்கம் முதலிய சில விஷயங்களை நம்பித் தான் ஆக வேண்டும். 'விசாலமான சொர்க்கம் முதலியவைகளை அனுபவித்து விட்டு மனிதன் பூலோகம் திரும்பி வந்து விடுவான்' என்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இதனால் இவன் எங்கு போனாலும் சுகம் இல்லை. இவன் தன்னிடம் தான் வந்தாக வேண்டும். தன்னைப் பற்றித் தெரிந்துகொள்ளத் தத்துவ ஞானம்தான் வேண்டும். அதைத் தருவதும் நம்முடைய மதமே இந்த ஞானத்தில் நம்பிக்கைக்கு இடமில்லை. இது அறிய வேண்டி ஒன்றாகும்.

ஆத்த-அனாத்மவிவேகமும், ஆத்மஸ்வருப விசாரமும்:-

இதுவரை கர்த்தா – கர்ம – கரணங்கள் என்ற மூன்று வார்த்தைகளுடைய அர்த்தத்தையும், அவிவேகத்தால் எப்படி கரணம் கர்த்தாவாக மாறுகிறது என்பதை

யும் பார்த்தோம். அவிவேகம் நீங்க ஆத்ம விசாரம் ஒன்றே வழி என்றும் பார்த்தோம். இவைகளைச் சுருக்கமாக நினைவு கூர்வோம்.

நான் என்ற பொருளுக்கு அர்த்தம் கர்த்தா. கர்த்தாவானவன் கரணமாக இருக்கும் மனத்தைத் தன் கையில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அவிவேகத்தால் கர்த்தாவிற்கும் கர்ம, கரணம் என்பதற்கும் குழப்பம் ஏற்படுகின்றது. கரணத்தைக் கர்த்தாவாக நினைக்கிறான். நான் என்ற பொருளும், துக்கம் என்ற எண்ணமும் இரண்டும் ஒன்று சேர்ந்து, 'நான் துக்கி (துக்கம் உடையவன்) என்று நினைக்கிறான். இதற்குக் காரணம் கர்த்தாவின் உண்மையான ஸ்வரூபம் தெரியாதது தான். இந்தப் பகுதியில் அதை கவனிப்போம்.

உலக விவகாரங்களில் நாம், கர்த்தாவை 'நான்' என்று சொல்கிறோமே தவிர, உண்மையில் இந்தக் கர்த்தா கூட 'நான்' அல்ல அந்தக் கர்த்தாவுக்கும் அடிப்படையான உண்மை ஒன்று இருக்கிறது. அது தெரியாததினால் தான் 'நான் கர்த்தா' என்று நினைக்கிறான். கர்த்தா என்ற வார்த்தைக்கு செயல் செய்பவன் என்று பொருள் 'நான் கேட்கிறேன்' என்று சொல்லும்போது கேட்கிற காரியத்தை நான் செய்து கொண்டிருக்கிறேன் என்று அர்த்தம். இவ்விதம் 'நான் நடக்கிறேன்', நான் பேசுகிறேன்' என்றெல்லாம் சொல்லும்போது ஒரு குறிப்பிட்ட கிரியையை நான் செய்து கொண்டு இருக்கிறேன் என்று தெரிகிறது. அப்போது, இதில் எந்தக் கிரியையை 'நான் என்ற வஸ்துவின் ஸ்வரூபமாக அல்லது உண்மையாகக் கூறுவது? கர்த்தாவான 'நான், என்ற வஸ்துவின் தர்மம் அல்லது ஸ்வரூபம் எப்போதும்

பார்ப்பது என்பதாக இருந்தால், பார்க்கிறது என்பது அதன் இயற்கையானால் அது எப்போதும் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். அதாவது எப்போதும் பார்க்கக்கூடிய காரியத்தைச் செய்பவனாக நான் இருக்க வேண்டும். இது எவ்வாறென்றால், நெருப்புக்குச் சூடு என்பது எப்படி அதனுடைய தர்மமோ அவ்விதம். அதனால் எங்கெல்லாம் நெருப்பு இருக்கின்றதோ அங்கெல்லாம் சூடு இருக்கத்தான் இருக்கும். சூடு இல்லாத நெருப்பு கலியுகத்திலும் கிடையாது. சூடு நெருப்பின் குணம். நெருப்பின் மேல் பிரகாசம் இல்லாமல் இருக்கலாம். அல்லது புகை இல்லாமல் இருக்கலாம். அவைகளெல்லாம் நெருப்பினுடைய உண்மையான குணமல்ல.

அம்மாதிரியே பனிக்கட்டி என்று சொன்னால் அது குளிர்ச்சியாகத்தான் இருக்கும். சூடான பனிக்கட்டி கிடைக்குமா? கிடைக்காது. பனிக்கட்டியைச் சூடு செய்தால் தண்ணீர் ஆகிவிடும். பனிக்கட்டி இருக்காது. பனிக்கட்டிக்குக் குளிர்ச்சியும், நெருப்பிற்குச் சூடும் அவைகளுடைய குணங்கள். இம்மாதிரியே ஆத்மாவிற்குப் பார்ப்பது கேட்பது, பேசுவது, நுகர்வது முதலானவைகள் தர்மங்களாக இருந்தால் இதில் எதை நாம் உண்மையாக எடுத்துக் கொள்வது. இந்தக் கிரியைகளில் ஏதொன்றாவது ஆத்மாவின் தர்மமாக இருந்தால், ஆத்மா பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். அல்லது கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி இல்லையே? எல்லாச் செயல்களையும் நாம் செய்கிறோம். வெவ்வேறு சமயங்களில் நாம் வெவ்வேறு செயல்களை செய்து கொண்டு இருக்கிறோம். ஒரே சமயத்தில் எல்லாச்

செயல்களையும் செய்கிறோம் என்றும் சொல்ல முடியாது. ஏனென்றால் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு செயலைத் தான் செய்ய முடியும்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? ஆத்மாவிற்கு எந்த விதச் செயலும் கிடையாது. ஆத்மாவிற்குச் சுயமாக கர்த்ருத்வம் கிடையாது' என்ற இந்த உண்மை தெரிகின்றது. இது மிக முக்கியமாய்த் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம். இந்த ஆத்மஸ்வரூபத்தைப் பற்றி மேலும் விசாரிப்போம்.

சாதாரணமாகப் பார்த்தால் நாம் ஒன்றுமே செய்யாமல் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாது என்று தெரிகிறது. பார்ப்பதோ, கேட்பதோ, நினைப்பதோ போன்ற ஏதாவது ஒரு செயலை நாம் செய்து கொண்டு தான் இருக்கிறோம். ஆனால் கூர்ந்து கவனிக்கும்போது ஒவ்வொரு சமயத்தில் அரை வினாடி நாம் பார்ப்பதோகேட்பதோ ஒன்றுமே செய்யாமலும் இருக்கிறோம். உதாரணமாக இரு எண்ணங்களுக்கு மத்தியில் இந்த நிலை ஏற்படுகிறது. ஆழ்ந்த உறக்கத்தில் மனம், புத்தி, இந்திரியங்களினால் ஆகக்கூடிய காரியங்கள் ஒன்றுமே நடப்பதில்லை. நான் கர்த்தா என்று சொல்லும் கர்த்ருத்துவமும் அங்கு இல்லை. 'நான் உறங்குகிறேன் என்று உறங்குபவன் கூறுவதில்லை. நான் உறங்குகிறேன் என்று நினைப்பதும் இல்லை. அப்போது உலக அனுபவமே இல்லாமல் போய் விடுகிறது. நாம் பயந்து கொண்டிருந்த இந்த (பிரம்மாண்டமான) உலகமே போய்விடுகிறது. ஏனென்றால் மனமும் இந்திரியங்களும் அப்போது வேலை செய்வதில்லை. இதிலிருந்து கர்த்தா, கரணங்கள் எல்லாம் அடங்கி விட்டது என்று தெரிகிறது. எல்லாமே ஒரேயடியாகப்

போய்விட்டதா என்று கேட்டால், இல்லை. எல்லாம் ஒடுங்கினாலும் நான் என்று சொல்லும் பொருளானது போவதில்லை. எப்படி எனில், 'நான் நன்றாகத் தூங்கினேன்' என்று விழித்த பின்பு இவன் கூறுகிறான். நான் என்ற வஸ்து உறக்கத்தில் இல்லை என்று சொன்னால், 'நான் நன்றாகத் தூங்கினேன்', என்று இவன் விழித்ததும் சொல்ல முடியாது. இதனால் 'நான்' என்பவன் உறக்கத்திலும் இருக்கிறான் என்று தெரிகின்றது. இவ்விதம், கேட்பது, பார்ப்பது, நடப்பது, சிந்தனை செய்வது போன்ற செயல்களைச் செய்யும் போதும், 'நான்' இருக்கிறேன். இவைகள் எல்லாம் இல்லாதபோதும் நான் இருக்கிறேன். எனவே செயல், செயல் அற்றது என்ற இரண்டு நிலைகளிலும் நான் இருக்கிறேன். இதிலிருந்து இந்த 'நான்' என்பது எல்லாக் கிரியைகளையும் விட்டுவிட்டுத் தானாகக் கிரியைகள் அற்று இருக்கக் கூடியது என்று தெரிகிறது.

இந்தக் கிரியைகளுக்கும் நான் என்பதற்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்றால் இல்லை. ஆத்மாவிற்குச் சுயமாகச் செயல்களுடன் ஒருவித சம்பந்தமும் கிடையாது. ஆத்மாவிற்கு இந்தக் காரியங்கள் எல்லாம் சுயமாகவே, ஸ்வரூப தர்மமாகவே இருக்குமானால், 'நான்' என்ற அந்த ஆத்மாவிற்கு அவைகளை விட்டு விட்டு இருக்க முடியாது. எப்படி நெருப்பானது தன் தர்மமான சூட்டை விட்டு இருக்க முடியாதோ அதுமாதிரி. ஆனால் மேற்கண்ட மாதிரி பல சமயங்களில் ஆத்மாவானது வெவ்வேறு செயல்களுடன் கூடி இருக்கிறது. சில சமயங்களில் உறக்கத்தில் – எல்லாக் காரியங்களையும், கர்த்ருத்துவத்தையும் விட்டு விட்டு இருக்கிறது. எனவே கர்த்ருத்துவமோ, செயல்களோ ஆத்மாவின் தர்மம் இல்லை என்று தெளிவாகத் தெரிய வருகிறது. ஆத்மா

என்பது தாமரை இலைத் தண்ணீர் போல, அஸங்கமாக, எதிலும் ஒட்டாமல் இருக்கிறது. கிரியைகளோடு சேர்ந்து இருக்கும்போது அவைகளில் ஒட்டுவது இல்லை. 'நான்' என்ற ஆத்மா எந்தக் காலத்திலும் எதிலும் ஒட்டாமல் நிர்மலமாகவே இருக்கிறது. இதுதான் மிகச் சிறந்த உண்மை. இந்த உண்மையை உணராமல் இவன் 'என்னை, உலகம் தொந்தரவு செய்கின்றது? என்று சொல்லுகின்றான். எங்கே உலகம் இவனைத் தொந்தரவு செய்கின்றது. நமக்குத் தொந்தரவு கொடுக்கக்கூடிய சக்தி உலகத்திற்கு எங்கே இருக்கிறது? உலகத்திற்கும் ஆத்மாவிற்கும் உறவு இருந்தால்தானே ஆத்மாவிற்குத் தொந்தரவு செய்யும் சக்தி உலகத்திற்கு இருக்க முடியும். ஆத்மா தான் உறவு அற்றுத் துறவியாகவே இருக்கிறதே. ஆத்மா எப்போதுமே துறவிதான். துறவி ஆக வேண்டியது இல்லை

ஆத்மா ஒரு நடிகன்:-

நாம் வெவ்வேறு கர்மாக்களைச் செய்யும்போது அந்த அந்தக் கர்மாக்களுடனும், கரணங்களுடனும் ஆத்மாவைச் சேர்த்தே பார்க்கிறோம். பேசும்போது 'நான் பேசுபவன்', பார்க்கும்போது 'நான் பார்ப்பவன்' சிந்தனை செய்யும் போது 'நான் சிந்திப்பவன், ராகத்தோடு (ஆசைகளோடு) இருக்கும்போது 'நான் ராகி', துவேஷத்தோடு, இருக்கும் போது 'நான் த்வேஷி', தேகத்தோடு ஒன்றுபட்டு இருக்கும்போது 'நான் ஆண், நான் பெண், நான் உயரமானவன், நான் குட்டையாவவன், என்று இவ்விதம் நான் என்ற வஸ்துவானது ஏற்கும் பாத்திரங்கள் வேறுபட்டும், மாறிக் கொண்டேயும் இருக்கின்றன. உலகத்தில் உறவை வைத்துப் பார்க்கும்போது மறுபடியும் 'நான் மனைவி' 'நான் மகள்', 'நான் தொழிலாளி', 'நான் முதலாளி', 'நான்

நண்பன்', என்று பல பெயர்கள் இவனுக்கு உள்ளது. ஒரே ஆத்மவஸ்துவானது மாறுபட்ட பல கிரியைகளையும், உறவுகளையும் ஏற்பதால் அதற்கு இவைகளோடு உண்மையான சம்பந்தமோ, ஸங்கமோ இருக்க முடியாது என்று தெரிகிறது. நான் என்ற ஆத்மா எப்போதும் அசங்கனாகவே இருக்கின்றது. எனவே மேற்சொன்ன கிரியைகள், உறவுகள் எல்லாமே ஆத்மாவிற்குப் பாத்திரங்களாக ஆகி விடுகின்றன. இதுதான் நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம்.

ஒருவர் நாடக மேடையில் நடிக்கின்றார். பெரிய நடிகர் திலகம் இவர். நாடகத்தில் ராஜாவேஷம் போடு கின்றார். அந்த ராஜாவிற்கு நாடகத்தில் பலவித கஷ்டங்கள் ஏற்படுகின்றது. ராஜாவாக நடிப்பவனுக்கு இதனால் ஏதாவது துக்க அனுபவங்கள் ஏற்படுகின்றதா? இல்லை.

முதலிலேயே பணக்காரனாக இருக்கும் நடிகன் ஒருவன் பிச்சைக்காரனாய் நடிக்க ஒப்புக் கொண்டான். இதனால் தான் மேலும் பணம் சம்பாதிக்கப் போகிறோம் என்று அவனுக்குத் தெரியும். அங்கு நாடக மேடையில் நிஜமான பிச்சைக்காரன் கூட ஏமாறும் விதத்தில் நடிக் கிறான். உண்மையாகவே கண்களில் கண்ணீர் வடிகிறது. சோகமான பாட்டுகளைப் பாடுகிறான். ஒவ்வொரு பிச்சைக்காரனிடமும் ஒரு குறிப்பிட்ட பிச்சைக்காரத்தனம் தான் இருக்கும். அவைகள் எல்லாவற்றையும் ஒருங்கே இவன் வெளிப்படுத்திக் காட்டுகிறான். ஓரிடத்தில் பிச்சை எடுக்கும் கப்பரை திருடு போய்விட்டது. அப்போது, இது என்ன வாழ்க்கை! என்று தாள முடியாமல் கண்ணீர் விட்டழுகிறான் இதைப் பார்த்துக்

கொண்டிருந்தவர்களும் தாங்க முடியாமல் அழுது விட்டார்கள். அப்போது உள்ளுக்குள்ளே இவன் என்ன நினைக்கிறான்? 'ஆஹா! நாம் நன்றாகவே நடிக்கின்றோம்' என்று உள்ளூர சந்தோஷம் இவனுக்கு. நடிப்பு முடிந்த பின்பு இவனிடம் சென்று, நீ எவ்வளவு நன்றாக அழுதாய்? மிகத் திறமையாக நடித்தாய்' என்று கொண்டாடுகிறார்கள். இது சாதாரண நடிப்பு இல்லை என்று புகழ்கிறார்கள்.

மறுதினம் உண்மையாகவே அவனுடைய மனைவி இறந்து விட்டாள். அவன் மனைவியினுடைய பிரிவினால் தேம்பித் தேம்பி அழுது கொண்டிருக்கிறான். அப்போது அவனுடைய நண்பன் ஒருவன் அவனைப் பார்த்து, 'நேற்றைவிட இன்று நன்றாய் நடிக்கின்றாய்' என்று சொல்ல முடியுமா? முடியாது. ஏன் என்றால் அது பொய் நாடகம். இது உண்மையான நாடகம். வாழ்க்கை உண்மை என்று இவன் நினைத்துக் கொண்டிருக்கிறான். இதுவும் ஒரு நாடகம் தானே! ஆத்மா அகர்த்தா தானே! எந்த செயல்களோடும் சம்பந்தம் எதுவும் இல்லாமல் தானே இருக்கிறது. இவன் ஏன் அழுகிறான்? கணவன் என்ற பாத்திரத்தை நினைத்துத் தானே, மனைவி இல்லாத தால் வருத்தமும் துக்கமும் ஏற்பட்டு இவன் அழுகிறான். இந்தக் கணவன் என்பது ஆத்மாவினுடைய தர்மமோ? கணவன் என்பது ஆத்மாவுக்குத் தர்மமாக இருந்தால் அழ வேண்டியது தான். ஆனால் அப்படி இல்லை. எப்போது நீ கணவன் ஆனாய்? பிறக்கும்போதே கணவனாகவா பிறந்தாய்? மனைவி வந்து அவனோடு தொடர்பு கொள்ளும் போதோ அல்லது அவனை நினைக்கும் போதோ தான் கணவன். இதுபோலத் தான் பணக்காரன் என்பதும்.

பணக்காரன் என்றால் என்ன இருக்கும்? அவனும் மூன்று இட்லிதான் சாப்பிட முடியும். இல்லை ஆறு இட்லி சாப்பிடலாம். அதற்கு மேல் சாப்பிட முடியுமா? பணக்காரன் என்றால் எத்தனை நாற்காலியில்தான் உட்கார முடியும். இரண்டு நாற்காலிகளில் ஒரே சமயத்தில் உட்கார முடியாது. இவனுக்கு ஏழு கார்கள் இருந்தாலும் ஒரு சமயத்தில் ஒரே காரில்தான் போக முடியும். முன்னே உட்கார்ந்தால் பின்னால் உட்கார முடியாது. பணக்காரன் என்றால், இவன் பாங்கில் உள்ள பணத்தை எல்லாம் நினைத்துக் கொண்டே இருந்தால்தான் பணக்காரன். 'எனக்கு, இவ்வளவு பணம் இருக்கிறது' என்று நினைத்தால்தான் இவன் பணக்காரன். எனவே, கணவன் பணக்காரன் போன்ற இவைகள் ஆத்ம தர்மம் இல்லை. இவைகள் ஆத்மாவின் தர்மமாக இருந்தால், நினைக்க வேண்டிய அவசியம் இல்லை. நெருப்பு சூடாக இருப்பது, தானோ மற்றவர்களோ நினைப்பதினாலா? இல்லை. ஸ்வபாவமாகவே நெருப்பு சூடாக இருக்கிறது. அதுபோல, கணவனாய், மனைவியாய் இருப்பது ஆத்மாவிற்கு சொந்த தர்மமானால் நினைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆகையினால் ஆத்மாவிற்கு எந்தவித தர்மமும் இல்லை. இவைகள் எல்லாம் ஆத்மாவிற்கு நாடகத்தின் பாத்திரங்கள் போலவேயாகும்.

நடிப்பு என்றால் பாத்திரங்களுக்கு ஏற்றாற்போல வசனங்கள் இருக்கும். அதன்படித்தானே நடித்தாக வேண்டும். அதுபோல, நாம் இந்த உலகமான நாடக மேடையில் ஏறிவிட்டோம். ஏறிய பின்பு நடித்துத்தானே ஆக வேண்டும். நடிக்கமாட்டேன் என்று சொன்னால் தயாரிப்பாளர் நம்மை விட்டுவிடுவாரா? நடிப்பதினால்

நமக்கு என்ன நஷ்டம்? நடிப்பதில் ஓர் ஆனந்தம் இருக்கிறது. எனவே வசனப்படி நடிக்க வேண்டியது நாம் தெரிந்து கொள்ள வேண்டியதாகும்.

பாத்திரத்தின் துக்கம் நடிகனைச் சேர்ந்தது அல்ல:-

யாரைக் கேட்டாலும் நிறையக் கஷ்டங்கள் இருப்பதாய்த்தான் கூறுகிறார்கள். இது உண்மையா என்று பார்ப்போம். ஒவ்வொரு பாத்திரத்திற்கும் ஒரு சில கஷ்டங்கள் இருக்கத்தான் செய்யும். தன்னைத் தந்தையாகப் பார்க்கும் போது "என் பையன் சரியாகப் படிப்பதில்லை, சொன்ன படி கேட்பதில்லை'' என்ற கஷ்டம் இருக்கும். தந்தை என்பது ஒரு பாத்திரம்தானே. அப்பா என்றால் எல்லோருக்குமே அப்பாவா என்ன? இல்லையே. அப்பா என்பதும் ஒரு பாத்திரத்தின் நடிப்புதான். பாத்திரத்தை வைத்துக் கஷ்டங்கள் வெவ்வேறு விதமாக இருக்கின்றன. இது போல, தன்னைப் புத்திரனாக வைத்துப் பார்க்கும் போது 'அப்பா நான் எதிர்பார்க்கும் மாதிரி நடப்பதில்லை. எப்போதும் கண்டித்துக் கொண்டே இருக்கிறார்' என்ற கஷ்டம் உள்ளது. இம்மாதிரி யஜமானன், தொழிலாளி, நண்பன், சத்ரு குடிமகன்., முதலாளி எல்லாப் பாத்திரங்களிலும் ஒருவித துக்கம் உள்ளது. தேகத்தை வைத்துப் பார்க்கும் போது 'வயது ஆகிவிட்டது' 'நடக்க முடிவதில்லை, 'கைகள் எடுக்க வருதில்லை', என்ற கஷ்டங்கள். இதுவும் ஒரு பாத்திரம்தான், கரணங்களை வைத்துப் பார்க்கும்போது, 'நான் ஊமை' 'நான் செவிடன்' 'நான் முடவன்', என்று நினைக்கிறான். மனதை வைத்துப் பார்க்கும் போது 'நான் சஞ்சலம், மனச் சோர்வு முதலானவை உடையவன். எனக்கு ஞாபகசக்தி இல்லை', என்று சொல்லி ஆத்மாவிற்கு இந்த குணங்களைச் சேர்க்

கிறுன். இவ்விதம் நான் என்ற பொருளுக்கு உண்மையில் எதனுடனும் சம்பந்தமும் இல்லாமல் இருந்தாலும் வியவஹாரத்தில் அது எல்லாவற்றுடனும் சேர்ந்து இருப்பது மாதிரி தெரிகின்றது. இதன் உண்மையைப்பார்ப்போம்.

மேடையில் ஒருவன் வேஷம் போட்டு நடிக்கிறுன். அந்த வேஷமானது நடிகனை நம்பித் தான் இருக்கிறது. உதாரணமாக அவன் பிச்சைகார வேஷம் போடுகிறுன் என்று வைத்துக்கொள்வோம். இந்தப் பிச்சைக்காரன் என்ற வேஷம் நடிகனை நம்பிக் கொண்டுதான் இருக்கிறது. பிச்சைக்காரனது கை, கால், கண், காது எல்லாமே நடிகனுடையவை. நடிகன் உள்ளே சென்று விட்டால் பிச்சைக்காரன் உள்ளே சென்று விடுவான். இதிலிருந்து என்ன தெரிகின்றது என்றுல் பிச்சைக்காரனுக்கு நடிகனைத் தவிரத் தனிப்பட்ட இருப்பு கிடையாது. ஆனுல் நடிகன் பிச்சைக்கார வேஷத்தை நம்பி இல்லை. பிச்சைக்கார வேஷம் இருந்தாலும், இல்லாவிட்டாலும் நடிகன் எப்போதும் இருக்கிறுன். வேஷம் போட்டதால் நடிகன் நிஜமாகவே பிச்சைகாரனுக மாறுவதில்லை. ஆகையால் நடிகன் பிச்சைக்கார வேஷத்திலிருந்து வேறுபட்டவன். அதாவது பாத்திரமானது நடிகனை நம்பி இருக்கிறது. நடிகன் பாத்திரத்தை நம்பி இருப்பது இல்லை.

இதே மாதிரி ஆத்மாவானது கணவனையோ, மனைவியையோ, பணத்தையோ, புகழையோ, தேகத்தையோ, கரணங்களையோ, நம்பி இல்லை. ஆனுல் அவைகள் எல்லாம் ஆத்மாவை நம்பி இருக்கின்றன. அவைகளுக்கு ஆத்மாவினுல் தான் இருப்பு கிடைக்கிறது. ஆத்மாவின் இருப்பு இல்லாமல் பாத்திரங்கள் இருக்க

முடியாது. ஆத்மாவின் இருப்பானது எதையும் நம்பி இல்லை.

இப்போது, தந்தை என்றால் துக்கம், மனைவி என்றால் துக்கம், யஜமானன் என்றால் துக்கம், என்று சொல்லும் போது இந்த துக்கங்கள் எல்லாம் எதற்கு? பாத்திரத்திற்குத் தான். இது புரிந்தால் இவனுக்குத் துக்கம் ஏன் வருகிறது? துக்கம் இல்லாமல் இருப்பது என்றால் எவ்விதம்? 'தந்தை' என்பதை விட்டுவிட்டால் துக்கம் போகும்' என்றால் எவ்விதம் தந்தை என்ற பாத்திரத்தை விடுவது? சரி, குழந்தைகளை விட்டு விடுகின்றேன், என்றான். குழந்தைகளை விட்டு விடலாம். ஆனால் தந்தையாய் விட்ட நிலையை எவ்விதம் விடுவது? 'நான் தந்தை' என்ற புத்தி ஒன்று உள்ளே உள்ளதே. அது எங்கே போகும்? 'நான் ரிஷிகேஷ் போய் விடுகிறேன்' என்று அங்கு போனால் அங்கும் இதைத்தான் நினைத்துக் கொண்டிருப்பான். அதாவது 'நான் எல்லாவற்றையும் விட்டு விட்டேன் என்று விட்டதை நினைத்துக் கொண்டிருப்பான். ஆனால் விட்டதில் இவனுக்கு இன்னும் மதிப்பு இருக்கிறது. ஆகையினால் இன்னும் அது இவனை விடவில்லை என்று அர்த்தம்.

ஒரு சிறு பையன் இருக்கிறான், அவனுக்கு கோலி விளையாடுவதில் மிக விருப்பம். ஐம்பது கோலிகள் அவன் சேர்த்து வைத்திருந்தான். அது அவனுக்குப் பொக்கிஷம் மாதிரி. அவன் வாழ்க்கையே அதில் தான் இருக்கிறது. தினமும் காலையில் கோலிகளை எடுத்து எண்ணி, எண்ணி வைப்பான். தம்பி (எங்கே) எடுத்து இருப்பானோ என்று பயம். இவன் கோலி விளையாடும் போது கைகள் எல்லாம் அழுக்காகி விடுகிறது. எனவே

இதைப்பார்த்த தந்தை அவனிடம், 'இன்று முதல் இந்தக் கோலி விளையாட்டை விட்டு விடு' என்று கூறினர். அங்குள்ள மற்றப் பிள்ளைகள் கோலி விளையாடும்போது இவனுக்குக் கோலியை விட மனம் வரவில்லை. ஆனால் தந்தையுடைய விருப்பத்திற்கு மதிப்புக் கொடுப்பவனாத லால்அப்பாவிடம் வந்து 'நான் கோலியை விட்டுவிட்டேன்' என்று சொன்னன். சொல்வது நன்ருகத்தான் இருந்தது. தந்தை அதைக் கேட்டு 'மிக்க சந்தோஷம் நல்ல வேலை செய்தாய்' என்ருர். ஆனல் அவனுக்கு உள்ளூர பயம். வெளியே சென்ருல் மற்றவர்கள் கோலி விளையாடுவதைப் பார்த்து தானும் விளையாடி விடுவோமோ என்று பயந்து வெளியில் போவதற்கு விருப்பம் இல்லாமல் பல நாட்கள் வீட்டினுள் உள்ளேயே இருந்தான். இதற்குப் பெயர் விட்டு விட்டேன் என்பது! எங்கே விட்டான்?

இதைத்தான் பகவான் கீதையில் சொல்கிருர்

''விஷயாஹா வினிவர்த்தந்தே
நிராஹாரஸ்ய தேஹின
ரஸவர்ஜம் ரஸோப்யஸ்ய
பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே''

இந்தக் கோலி விளையாடும் விஷயம் பையனிடமிருந்து போய்விட்டது. எப்படி? ரஸவர்ஜம், அதாவது விஷயத்தில் உள்ள ரஸம் அல்லது மதிப்புப் போகவில்லை. அதைத்தவிர மற்றது எல்லாம் போய்விட்டது. நிரா ஹாரஸ்ய என்ருல் 'வைராக்யம் உடையவனுடைய' என்று பொருள். வைராக்யத்தினுல் இவன் உலகப் பொருள்களையும், உறவுகளையும் விட்டுவிடலாம். விட்டு விட்டு 'நான் எல்லாவற்றையும் வேண்டாமென்று துறந்துவிட்டேன்'' என்று சொல்லலாம். ஆனல் அவை

களின் மேலுள்ள ரஸம் அல்லது மதிப்பு உள்ளுக்குள் இருக்கும்.

இப்போது அதே பையன் தாத்தாவாக ஆகி விடுகிறன் என்று வைத்துக் கொள்வோம். அவர் ஒருவரிடம் சென்று 'நான் கோலி விளையாடுவதை விட்டுவிட்டேன்' என்று சொன்னால் எப்படி இருக்கும்? என்ன கோலியை விட்டு விட்டீர்களா? மருந்து கோலி சாப்பிடுவதையா விட்டு விட்டீர்கள்'' என்றுதான் அவர் திருப்பிக் கேட்பார். சிறு பையன் இவ்விதம் 'கோலி விளையாடுவதை விட்டு விட்டேன் என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும். ஆனால் தாத்தாவான பெரியவர் சொன்னால் 'ஐயோ பாவம்! இன்னும் குழந்தை மனநிலை போகவில்லை என்று நினைப்போம்.

ஒரு சந்யாஸி, 'நான் பெரிய பதவி, வேலை, சொத்துக்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டேன்' என்று சொன்னர் என்று வைத்துக்கொள்வோம். இதற்கு என்ன அர்த்தம்? இன்னும் தான் விட்டதில் இவருக்கு மதிப்பு இருக்கிறது. மனப்பக்குவம் வரவில்லை; என்றுதான் தெரிகிறது முன்னல் சொன்ன சிறு பையன் எப்படி கோலி விளையாட்டை விட்டுவிட்ட போதிலும், அதன்மேல் மதிப்பு வைத்திருந்ததனல் வெளியில் வர பயந்தானே, அது போலத்தான் இது.

பாத்திரங்கள் இருந்தால் தானே கஷ்டம். எல்லாவற்றையும் விட்டு விட்டுப் போகிறேன் என்றால், எங்கே போவது? எனவே எதையும் விட வேண்டிய அவசியம் இல்லை. ஆத்மா ஏற்கனவே எல்லாவற்றையும் விட்டு விட்டுத்தான் இருக்கிறது. உள்ளே, வேஷம் போடுபவனை

வேஷம் பிடித்துக் கொண்டிருக்கிறதா என்ன? அவன் எல்லாவற்றையும் விட்டுவிட்டுத்தான் இருக்கிருன். வேஷம் போடுபவனுக்கும், வேஷம் போடாதவனுக்கும் என்ன வித்யாஸம்? ஒன்றும் இல்லை. வேஷத்தை வேஷமாய் யார் தெரிந்து கொள்கிருனே அவனுக்கு அந்த வேஷத்தினுடைய கஷ்ட நஷ்டங்களும் சுக துக்கங்களும் ஏற்படாது. அதற்குத்தான் வேஷம் என்று பெயர்.

சுவாமிஜி! கஷ்டமே இல்லாத வேஷம் கிடைக்குமா? என்று ஒருவன் கேட்டான். அப்படி ஒரு வேஷம் போட்டு என்ன பிரயோஜனம்? அதில் ரசனை ஏது? பாத்திரம் என்ருல் எல்லாம் கலந்துதான் இருக்கும்.

ஒரு காண்டிராக்டருக்கு சிறு வயதிலிருந்தே தான் இருக்கும் ஊரில் ஒரு கால் பந்தாட்ட விளையாட்டுத் திடல் கட்ட வேண்டும். அங்கு கால்பந்தாட்டப் பந்தயங்கள் நிகழ்த்த வேண்டும்' என்று ஆசை. பின்னல், தன் விருப்பம் போலவே பெரிய பந்தய மைதானம் அமைத்தார். அதில் விளையாட விம்கோ கம்பெனி, மோகன் மேகின் என்ற இரண்டு அணிகளைத் தேர்ந்தெடுத்தார். இந்தக் கால் பந்தாட்ட பந்தய விழாவிற்கு மந்திரியை வரவழைத்திருந்தார். தன் சுற்றத்தார் பலரையும் அழைத்திருந்தார். இவர் குடும்பத்தில் பெரியவரான, கிராமத்தில் இருந்த இவரது பாட்டனர் விளையாட்டைப் பார்க்க வந்திருந்தார். இவர் கால்பந்தையோ, இந்த விளையாட்டையோ இது வரை பார்த்ததே கிடையாது. இந்தப் பாட்டனரைத் தன் அருகில் அமர்த்திக் கொண்டு விளையாட்டைப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தார் காண்டிராக்டர் விளையாட்டைப் பார்க்க வந்திருந்தவர்கள் ஆரவாரம் செய்து கொண்டும் விளையாட்டை ரசித்துக் கொண்டும்

இருந்தார்கள். ஆனால் பாட்டனார் மட்டும் வருத்தமாக இருந்தார். இதைக் கவனித்த காண்டிராக்டர், "ஏன் வருத்தமாக இருக்கிறீர்கள்" என்று விசாரித்தார். அதற்குப் பெரியவர், "உன்னைப் பற்றி ஒரு விஷயம் எனக்குப் புரியவில்லை. நீ இவ்வளவு லட்சக் கணக்கில் செலவு செய்தாய். இறுதியில் நீ கருமியாகி விட்டாயே என்று தான் கவலை" என்றார். இதைக் கேட்ட காண்டிராக்டர் "எங்கே நான் கருமியானேன். புரிய வில்லையே, நீங்கள் சொல்வது. இவ்வளவு பணம் செலவு செய்து நன்றாகத் தானே செய்திருக்கிறேன். எங்கே கருமித் தனம் என்று சரியாக விளங்கும்படி கூறுங்கள்" என்று கேட்டார். அதற்குப் பெரியவர், "அந்த இருபத்தி இரண்டு பேர்கள் விளையாடுகின்றார் கள். நீயோ ஒரே ஒரு பந்தைக் கொடுத்து விளையாடச் சொல்லி இருக்கின்றாயே, அவர்கள் அனைவரும் ஒரு பந்தை விரட்டிக் கொண்டு ஓடுகின்றார்கள். ஆளுக்கு ஒரு பந்து கொடுத்திருக்கலாம். இதில் உனக்கு என்ன குறைந்து விட்டது?' என்று கேட்டார், தன் அறியாமை யினால், இருபத்தி இரண்டு பந்துகளை விளையாடப் போட்டால் விளையாட்டு எங்கே இருக்கும்? ஆளுக்கு ஒரு பந்து எடுத்துக் கொண்டு போய் விடுவார்கள். ஒரு பந்து தான் அப்போதுதான் அது விளையாட்டு. அதே போல் பாத்திரம் என்று சொன்னால் சுகமாகவே இருக்கும் பாத்திரம்என்று ஒன்றும் கிடையாது. நடுவில், இப்படி அப்படி இருக்கத்தான் இருக்கும். அப்போது தான் நாடகம் ரசனையாக இருக்கும். பாத்திரம் என்றால் சுகதுக்கங்கள் கலந்துதான் இருக்கும். அப் போதுதான் நாடகம் என்பது பார்க்கக் கூடியதாக, இருக்கும். தோல்வியோ, துக்கயோ, சண்டையோ

போட்டியோ, எதிர்ப்போ இவைகள் எவையுமே இல்லாமல் உள்ள சில பாத்திரங்களை வைத்துச் சினிமா எடுத்தால் அதை யார் பார்ப்பார்கள்? டைரக்டருடைய மனைவிகூடப் பார்க்கமாட்டாள்.

மூக்கு என்றால் ஜலதோஷம் வரும் சாமியாருக்கும் இருதயவலி வந்துவிட்டதே என்றால்! 'ஆமாம். அதனால் என்ன? சாமியாருக்கும் இருதயம் இருக்கின்றது'' என்று தெரிகின்றது. இருதயம் இருந்தால் வலி வருவது நியாயம் தானே. பாத்திரம் என்று சொன்னால் ஏதாவது இடைஞ்சல்கள் வந்து கொண்டுதான் இருக்கும். இதில்தான் வேடிக்கை. பாத்திரங்கள் எப்படி இருந்தாலும் நாடகத்தில் நடிக்கலாம். ஆனால் நான் நடிகன் என்று தெரிந்து கொள்ள வேண்டும். அது தெரியவில்லை என்றால் கஷ்டங்கள் எல்லாம் நம்முடைய கஷ்டங்களாகி நாடகம் என்பது வாழ்க்கையாக மாறிவிடும். எனவே இந்த வாழ்க்கையே ஒரு நடிப்புத்தான் என்று நன்கு தெரிந்து கொண்டு ஆத்மாவிற்கு எதனுடனும் சம்பந்தம் இல்லை என்று அறிந்து கொண்டு நடித்தால் நிறம்பட நடிக்கலாம். பாத்திரங்களுடைய கஷ்டங்கள் நம்மைப் பாதிக்காது. நடிப்பு, நடிப்பாக இருப்பதற்கு ஆத்மாவானது அகர்த்தாவாக இருக்கின்றது என்ற உண்மை இவனுக்குத் தெளிவாகத் தெரிய வேண்டும். ஆத்மாவானது ராக, துவேஷங்கள், கர்த்ருத்வம் இல்லாமல் ஆனந்த சொரூபமாக இருக்கின்றது என்று தெரிந்து கொள்வதற்குத்தான் கர்மயோகம் என்று வைத்திருக்கின்றார்கள். இதை தெரிந்து கொள்வதற்கு என்ன வேண்டும்? கரணம் வேண்டும். என்ன கரணம்? அந்தக் கரணம்.

ஆத்மா பூர்ணன் என்று சுவாமிஜி சொன்னால் சிலருக்குப் புரிகின்றது, சிலருக்கு புரிவதில்லையே ஏன்?

இவ்விஷயம் புரியாமல் இருப்பதற்குக்காரணங்கள் உண்டு. பெரும்பாலானவர்கள் போதிக்கும் முறையில் ஏற்படும் தவறுதல்கள் ஒரு முக்ய காரணம். அநேக புத்தகங்கள் ஆத்மாவைப் பற்றித் தவறுப் போதிக்கின்றன. உலகத்தை, எண்ணங்களை, மித்யை என்று அவர்கள் சொல்வார்கள். அதைத் தள்ள வேண்டும் என்றும் கூறுவார்கள். மித்யையை எப்படித் தள்ளுவது? இவ்விதம் கூறுவதாலும் இவனுக்கு ஞானம் ஏற்படாமல் இருக்கலாம்.

சொல்லிக் கொடுக்கும் ஆச்சாரியனுக்கு சரியான ஞானம் இருந்தால், இவனுக்கு நன்றாகப் புரியும். அவ்விதம் நல்ல ஆச்சார்யன் இருந்து கற்றுக் கொடுத்தும் இவனுக்குப் புரியவில்லை என்றால் அந்தக் கரணத்தில் தான் குறை உள்ளது. இந்த அந்தக் கரணத்திற்கு ஒரு முக்ய குணம் உண்டு. அதற்கு எல்லாவித ஞானத்தையும் அடையக் கூடிய சக்தி உள்ளது. இந்த ஞானசக்தியைப் பெற்றுக் கொள்ளும் தகுதி உடையதாக அந்தக் கரணத்தைத் தயார் செய்து கொள்ள வேண்டும். இது அனைவரும் அறிய வேண்டிய முக்கிய விஷயமும் உண்மையுமாகும்.

ஒருவனுக்கு கணிதமேதையாக ஆக வேண்டும் என்ற ஆவல் இருந்தது. அதற்குப் பொருத்தமான உபாத்தியாயர் கிடைக்கவில்லை. கொஞ்ச நாட்களுக்குப் பிறகு, ஒரு கணிதப் பேராசிரியர் இவன் வீட்டிற்கு பக்கத்து வீட்டிற்கே குடி வந்தார். இவனுக்கு அவன் விருப்பப்படி 'கால்குலஸ்' என்ற மேல்நிலைக் கணிதம் கற்றுக் கொடுத்தார். கால்குலஸ் என்ற வார்த்தை யாரோ சொல்லி இவன் கேட்டிருந்தான். ஆனால் இவனுக்குப்

பாடம் ஒன்றும் புரியவில்லை. இதைக் கவனித்த அவர் கீழ் வகுப்புக் கணக்குகளைச் சொல்லிக் கொடுத்தார். அதுவும் இவனுக்குப் புரியவில்லை. ஐந்தாம் நான்காம் வகுப்புக் கணக்குகளைச் சொல்லிக் கொடுத்தார். எவ்வளவு கீழ்நிலையில் இறங்கிக் கற்றுக் கொடுத்தும் இவனுக்குப் புரியவில்லை., கடைசியில் ஐந்தும் நான்கும் எவ்வளவு என்று கேட்டார். அதற்கு இவன் எட்டோ அல்லது பத்தோ இருக்கலாம் என்றான். இவனுக்கு மேல்நிலைக் கணிதம் படிக்க வேண்டும் என்ற ஆசை உள்ளது. இதனால் இவனுக்கு வித்யார்த்தி என்று பெயர். இந்த உயர்ந்த ஆசையில் தப்பு ஒன்றுமில்லை. ஆனால் அதற்காக மனதைத் தயார் செய்து கொள்ள வேண்டும். அதற்குத் தகுந்த முறைப்படி சிரமப்பட்டுக் கணக்குகளைக் கற்றுக் கொள்ள வேண்டும். அது காலக்ரமத்தில் தான் ஏற்படும். இதுபோல் எந்த விஷய ஞானமானாலும் அதைத் தெரிந்து கொள்ள, அந்த விஷயத்திற்கு ஏற்ற அதிகாரித்வம் வேண்டி இருக்கிறது. ஆத்மஞானம் பெறுவதற்கும் இம்மாதிரி அதிகாரித்வம் வேண்டும். இந்த அதிகாரித்வம் அந்தக் கரணத்திற்கு வேண்டியதாக இருக்கிறது. இந்த அதிகாரித்வத்தைத் தருவது தான் கர்ம யோகம் என்பது. இந்த கர்மயோகத்தினால் தான் ஞானம் கிடைக்கும்.

(2) கர்மயோகம்

எந்தப் பொருளை நாம் அடைய வேண்டும் என்று விரும்புகின்றோமோ, அந்தப் பொருளையும், யார் அடைய வேண்டுமென்று விரும்புகின்றானோ அவனையும், எது, சம்பந்தப்படுத்துகிறதோ அதற்கு யோகம் என்று பெயர்.

நாம் அடைய வேண்டிய பொருளுக்குச் சாதனமாக இருப்பது யோகம். ஆகையால் யோகம் என்பது ஒரு சாதனம். சாதகன், சாதனம், சாத்யம் என்ற மூன்று வார்த்தைகள் யோகத்தோடு சம்பந்தப்பட்டவை, எதனால். நாம் ஒன்றை அடைகின்றோமோ அதற்கு சாதனம் என்று பெயர். எவன் ஒருவன் சாதனத்தினால் ஒன்றை சாதிக்க விரும்புகிறானோ அவனுக்கு சாதகன் என்று பெயர். எதை நாம் சாதனத்தினால் அடைகிறோமோ அதற்கு சாத்யம் என்று பெயர்.

சாத்யம்: இங்கு சாத்யம் என்பது பூர்ணமாக ஆத்மா "பரப்பிரம்மம் தான் நான்" என்று நம்மைத் தெரிந்து கொள்வதே சாத்யம், எல்லா மனிதர்களுக்குமே ஒரு முக்கியமான ஆசை உள்ளது என்ன ஆசை? 'இது வேண்டும், அது வேண்டும்,' என்று கேட்டாலும் கூட, தன்னிடம் உள்ள,வேண்டும்.....வேண்டும்.....வேண்டும் ......என்ற அடிப்படையான ஒரு குறையை, அதிருப்தியைப்போக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆசையே அது. அதனால் எல்லோருமே 'நான் பூர்ணமாக ஆக வேண்டும். பூர்ணத்தை அடைய வேண்டும் என்று ஆசை கொள்கிறார்கள். ஆனால் பூர்ணமான வஸ்து வானது எந்த ஒரு பொருளாலும் அடையபடப் முடியாதது காரணம் என்னவென்றால், இவன்,'எனக்குப் பல குறைகள் உள்ளன. நான் அல்பன்' என்று தன்னை நிச்சயித்துக் கொண்டு, பிறகு நான் பூர்ணத்தை அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டுப் பலவிதமான பொருள் களைச் சேர்க்கிறான்., உதாரணமாக, வீடு இல்லாமல் இருந் தவனுக்கு வீடு கிடைத்தது என்று வைத்துக் கொள் வோம். அந்த வீடு பூரணம் இல்லையே? பணமோ, பதவியோ எது கிடைத்தாலும்கூட அதோடு தன்னைச்

சேர்த்துப் பார்க்கும்போது, அப்போதும் அதிருப்தி இருந்து கொண்டேதான் இருக்கும்.

இவனுக்குத் தன்னைப் பற்றி அடிப்படையான எண்ணம். 'நான் குறையுள்ளவன். அழிவுக்கு உட்பட்டவன். பாதுகாப்பற்றவன், வரையறுக்கப்பட்டவன் என்பனவாகும். உலகத்திலுள்ள பொருட்கள் எல்லாமே (அதேபோல) அழியும் தன்மையும் பாதுகாப்பற்றதாகவும் உள்ளன. அவைகள் யாவையுமே அல்பமானவை அப்படிப்பட்ட பொருள்கள் எவ்வளவு ஒன்று கூடினுலும் அவை நித்யமாகவோ,பூர்ணமாகவோ ஆக முடியாது. எவ்வளவுதான் அவைகளை நான் சேர்த்து வைத்துக் கொண்டாலும் நானும் பூர்ணனாக முடியாது.

இதிலிருந்து ஏதோ ஒன்றை நாம் அடைவதினாலோ அல்லது ஒன்றை நம்மிடமிருந்து தள்ளுவதினாலோ, நமக்குப் பூர்ணம் என்பது' ஏற்படாது. அதனால் பூர்ணம் என்பது எல்லாவற்றையும், தன்னையும், தன்னுள் அடக்கி ஏற்கனவே பூரணமாக உள்ள 'நான்' என்ற ஆத்மவஸ்து தான்.

உதாரணமாக ஒரு பானையை எடுத்துக் கொள்வோம். அது பத்து லிட்டர் ஆகாசம் (வெளி) கொள்ளக் கூடியது. "நான் பத்து லிட்டர் ஆகாசம் கொள்ளும் பானை. இருபது லிட்டர் ஆகாசம் கொள்ளும் பானையானல் எனக்கு குறை இருக்காது. நான் திருப்தனாகி விடுவேன்'' என்று அந்தப்பானை நினைக்கிறது. இருபது லிட்டர் ஆகாசம் உடைய பானையை 'நீ எப்படி இருக்கின்றாய்? என்று கேட்டால், அது, ஐம்பது லிட்டர் ஆகாசம் கொள்ளக் கூடியதாக நான் மாறினுல் எனக்குக குறை இருக்காது நான் பெரியவனாகி விடுவேன்' என்று கூறும். இவ்விதம் எவ்வளவு பெரிய பானையாக இருந்தாலும், அதனிடம் ஒரு பற்றாக்குறை இருக்கத்தான்

செய்யும். நான் அபூர்ணன் என்ற அதிருப்தி எல்லாரிடமும் இருக்கிறது.

மேலே சொன்ன பத்து லிட்டர் பானையில் இருக்கக் கூடிய ஆகாசம் இருக்கின்றதே, அதை 'நீ அல்பனா?' என்று கேட்க வேண்டும். பானையில் இருக்+க்கூடிய ஆகாசம், வெளியிலிருக்கக் கூடிய ஆகாசத்திற்கு அப்பாற்பட்டு இல்லை. பானையே ஆகாசத்தில் தானே இருக்கிறது! எங்கும் நிறைந்துள்ள ஆகாசத்திற்கு வரையறை போட முடியாது. பூர்ணமாக இருக்கக்கூடிய ஆகாசமாகவே இருக்கிற இந்தப் பானை-ஆகாசம்,'பத்து லிட்டர் ஆகாசம்' என்று இப்படி நினைப்பதினால் ஏற்படக் கூடியதே அதன் கஷ்டங்கள் எல்லாம். இந்தப் பற்றாக்குறை நினைப்பை மறக்கும் போதெல்லாம் ஆனந்தம் வெளிப்படுகிறது.

தேகத்தை நான் என்றும், மனதை நான் என்றும், எனக்கு துக்கம் இருக்கின்றது என்றும், இவைகள் நீக்கி தேவைகள் எல்லாம் பூர்த்தியானுல் நான் 'சுகம் அடைவேன் என்றும் மனிதன் நினைக்கிறுன். எந்தச்சமயத்தில் நான்'நான் அல்பன்,குறையுள்ளவன்' என்பதை மறக்கிறுனே அப்போது அவனுக்கு ஆனந்தம் ஏற்படுகிறது.

தன்னை மறப்பதினுல் தான் மனிதனுக்குத் தூக்கத்தில் ஆனந்தம் ஏற்படுகிறது. நேற்று தூங்கினேன். இன்றும் தூங்கினேன், நாளைக்கு ஏன் தூங்க வேண்டும்? தினந்தோறுமே தூங்க வேண்டுமா? என்று யாருமே கேட்பது இல்லை. எல்லோருக்குமே, தூக்கத்தில் ஆனந்தம் ஏற்படுவதினுல தூங்க வேண்டும் என்றுதான் ஆசை. தூக்கத்திலிருந்து வெளி வருவதற்குத் தான் கஷ்டம். எவ்வளவு முறை எழுப்பினாலும், தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு வெளியில் வருவது மிகுந்த சிரமமான காரியம். விழித்த பிற்பாடு சிலருக்குப் படுக்கையிலிருந்து எழுந்து வெளியில் வருவதற்கு அரைமணி நேரத்திற்கும்

மேல் ஆகிவிடும். 'காபி தயாராகிவிட்டது' என்றால் தான் சிலர் எழுந்து வருவார்கள். மற்றும் சிலரோ, காபியைச் சாப்பிட்டுவிட்டு மறுபடியும் படுத்துக் கொள் வார்கள், விட்ட தூக்கத்தை நிறைவு செய்வதற்காக. இதற்குக் காரணம் என்னவென்றால், தூக்கத்தில் இருக்கும் ஆனந்தத்தைவிட்டு வெளியில் வருவதற்கு இவனுக்கு விருப்பம் இல்லாததுதான். கிரிக்கெட் ஆட்ட பேட்டியைக் (வர்ணனையைக்) கேட்டுக் கொண் டிருப்பவனைச் சாப்பிடக் கூப்பிட்டால் அவன் எழுந்து வரமாட்டான். ஏன்? அதில் அதிகமான விருப்பம் இருக்கிறது. அப்படியே அவன் எழுந்து வந்தாலும் ரேடியோவையும் (டிரான்ஸிஸ்டர்) கூடவே எடுத்துக் கொண்டுதான் வருவான். எந்த இடத்தில் நமக்கு அதிக ஆவலும் விருப்பமும் இருக்கின்றதோ அதை விட்டு நாம் வருவது இல்லை. தூக்கமும் இதுபோலத்தான். தூக்கத் தில் இது வேண்டும், அது வேண்டும் என்ற எண்ணங்கள் இல்லாமல் எந்தவித குறைகளுமின்றி ஆனந்தமாக இருப்ப தால் தூக்கத்தை எல்லோரும் விரும்புகிறார்கள். அதை விட்டு வெளிவருவதற்கு யாரும் விரும்புவது இல்லை. விழித்துக் கொண்டிருக்கும் போது கூட எப்போ தெல்லாம் இவனுக்குப் பற்றாக் குறைகள் இல்லையோ, அப்போதெல்லாம் ஆனந்தம் தான். குறைகளை உடைய வன் நான்' என்று தன்னைப் பற்றியோ அல்லது பற்றாக் குறைகளைப் பற்றியோ எண்ணங்கள் இல்லாத போதெல்லாம் இவனுக்கு ஆனந்தம் தான் இருக்கிறது. அந்த சமயத்தில் என்ன ஏற்படுகிறது. எப்போதும் உள்ள ஆனந்த ஸ்வரூபமான ஆத்மாதான் வெளிப்படு கிறது. வெளிப்படையாகத் தெரிகிறது.

மேலே சொன்ன பாணை. 'நான் சிறிய பத்து லிட்டர்

பானை. பத்து லிட்டர் ஆகாசம் தான் கொள்ளக் கூடியவன்' என்ற இந்தக் குறைகளை மறக்கும்போது ஆனந்தமும், அவைகளை நினைக்கும்போது துக்கமும் அடைகிறது. பானையின் இந்தத் துக்கம் நீங்க, அதற்குப் பூர்ணத்வம் வேண்டும். அந்த பூர்ணத்வம் எப்படிக் கிடைக்கும்? "எங்கும் இருக்கும் ஆகாசம் எனினிலும் இருக்கிறது. ஆகாசம் ஒன்றே தான். நானே அகண்ட ஆகாசம்'' என்று பானை தெரிந்து கொள்ள வேண்டும். இதற்குத்தான் ஞானம் என்று பெயர். இது தான் சாத்யம் எனப்படுவது. இந்த ஞானத்தை எப்படி அடைவது? இதற்கு பிரமாணம் நமது வேதாந்த சாஸ்திரங் களே, "நீ தான் அது'' (தத்வமஸி) என்று சாஸ்திரப் பிரமாணம் சொல்கிறது. இதைக் குரு மூலமாகக் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். குருவும் உபதேச மும் ஒன்றுதான். இதுதான் முக்கிய சாதனம்.

சாஸ்திரங்களை முறையாகக் குரு மூலம் கேட் டாலும் இந்த ஞானம் மனதில் பதியுமா என்று கேட் டால், அது இவனுக்கு மனப் பக்குவம் எப்படி இருக் கிறதோ அதைப் பொருத்துத்தான் ஏற்படும் எனவே மனதைத் தயார் செய்வதானது இரண்டாம் நிலை சாதன மாகிறது. இதையே யோகத்தின் மூலம் அடைகிறோம். இது எப்படி என்று பார்ப்போம்.

யோக சாதனம்:—

இந்த உலகத்தை நாம் மூன்று விதமாகப் பார்க் கின்றோம். ராகம் (விருப்பு) த்வேஷம் (வெறுப்பு) ஔதா சீன்யம் (விருப்பு வெறுப்பற்ற நிலை)என்பதே இவைகள்.

ராகம்:—

ராகம் என்பது, "இது எனக்கு வேண்டிய

பொருள். இதை நான் அடைய வேண்டும். இதனுல் எனக்குச் சுகம் கிடைக்கும். ஆகையால் இந்தப் பொருள் க்ஷேமமாக இருக்க வேண்டும். இது என்னை விட்டுப் பிரியக் கூடாது'' என்ற இச்சை. இந்த இச்சையோடு தான் மனிதன் உலகத்தைப் பார்க்கிருன்.

த்வேஷம்:—

இது எனக்கு வேண்டாத பொருள். இது என்னிடம் இருக்கக் கூடாது. மரணம், வயோதிகம், வியாதி முதலிய நிகழ்ச்சிகள் எல்லாம் ஏற்படக் கூடாது. நஷ்டம் வரக்கூடாது. இவைகள் எல்லாம் எனக்குக் கஷ்டங்களைத் தருபவை. துக்கத்தைத் தரும். இந்தச் சம்பவங்கள் எல்லாம் எனக்கோ, என்னைச் சேர்ந்தவர் களுக்கோ வரக்கூடாது. துக்கத்தைத் தருபவன் யாராவது இருந்தால் அவனும் என்னிடம் வரக்கூடாது'' என்ற நினைப்பே த்வேஷம் எனப்படும். த்வேஷம் துக்கத்தைத் தரும் பொருள்களிடமோ, மனிதர்களிடமோ, நிகழ்ச்சிகளிடமோ ஏற்படுகிறது. இந்தத் த்வேஷத் தோடும் மனிதன் உலகத்தைப் பார்க்கிருன்.

ஔதாசீன்யம்:—

இது மூன்றாவது வகை. ஔதாசீன்யம் உள்ளவனுக்கு எந்தவிதமான விருப்பும் கிடையாது. வெறுப்பும் கிடையாது. போகும் பாதையில் புல் இருந்தால் சாதாரணமாக அதில் விருப்பு, வெறுப்பு ஏற்படுவதில்லை. இவ்விதம் உலகில் எவ்வளவோ பொருள்கள் இருக்கின்றன. இவைகளின் மேல் உள்ள மனோநிலைக்கு உதாசினம் என்று பெயர். ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு வஸ்துக்களின் மேல் உதாசினமான நிலை உண்டு.

மேலே சொன்ன ராகத்வேஷ, ஔதாசீன்யம் என்ற மூன்று குணங்களால் ஏற்படும் மனமாற்றம், அதனால் ஏற்படும் சுக, துக்க அனுபவங்கள். இவைகளைப் பற்றி நாம் சினிமாவிலும் பார்க்கின்றோம். உதாரணமாக பக்கத்து வீட்டில் புது குடித்தனக்காரன் ஒருவன் வந்தான் என்று வைத்துக் கொள்வோம். முதலில், 'யார் வந்தால் நமக்கென்ன' என்று அவனிடம் உதாசீனமாக இருப்போம். அவன் தன் வீட்டுக் குப்பையை நம் வீட்டில் போட்டால் அவனிடம் இப்போது த்வேஷம் வரும். முன்னால் உதாசீனமாக இருந்தவனிடம் இப்போது த்வேஷம் ஏற்பட்டு விட்டது. பின்னால் அவனே நம்மிடம் மிகுந்த சிநேகம் கொண்டாடினால், அப்போது த்வேஷித்தவனிடம், இப்போது ராகம் ஏற்பட்டு விடும் இதே மாதிரி ராகத்திற்குரிய பொருள்கள் எல்லாம் த்வேஷமாகவும்ஆகலாம். இவ்விதம் மாறி மாறி ஏற்படும் ராகம், த்வேஷம், ஔதாசீன்யம் என்ற உள்ளே இருக்கும் இந்த மூன்று குணங்களை வைத்துத்தான், வெளியில் உள்ள உலகப் பொருள்களை நாம் மீண்டும் மீண்டும் பார்க்கிறோம். இவ்விதம் பார்க்கும் போது 'விரும்பிய பொருள்கள் வர வேண்டும். விரும்பாத பொருள்கள் வரக் கூடாது' என்று நினைக்கிறோம். ஆனால் விரும்பிய பொருள்கள் வருவதில்லை. வேண்டாதவைகள் தான் அதிகமாக வந்து கொண்டே இருக்கும். ஒரு ரூபாய்க்கு ஒரு லாட்டரி டிக்கட் வாங்கி விட்டு, ஒரு கோடி ரூபாய் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறான். ஆனால் வேண்டிய இந்த ஒரு கோடி வருவது இல்லை. இதனால் மனம் எப்படி இருக்கும்? எப்போதும் துக்கத்தில் தான் இருக்கும். 'துக்கப்படாமல் இரு' என்றால் எப்படி இருக்க முடியும்? இந்தப் பிரச்சனை எல்லோருக்கும் உண்டு.

பணக்காரன், ஏழை, வாலிபன், வயோதிகன், வியாபாரி, வேலை செய்வன், ஆண், பெண் எல்லோரிடமும். இந்த ராகத்வேஷம் இருக்கிறது. இந்தக் குணங்கள் சந்யாசி களிடம் கூட இருப்பதைச் சில இடங்களில் பார்க்கின்றோம்.

ஞானப் பிரதி பந்தம் (தடை):—

இந்த ராகத்வேஷங்கள் இருக்கின்றவனிடம் நாம்போய், 'நீ பூரண ஆத்மா' என்று சொன்னால் அவனுக்கு என்ன புரியும்? அவனுக்கு இன்னும் அதிக துக்கம் இப்போதுவந்து விடும். அதாவது, 'நான் பூர்ண ஆத்மா' என்று சுவாமிஜி சொல்கிறார். இன்னும் எனக்குத் துக்கம் இருக்கிறதே' என்று நினைத்துப் புதிய துக்கம் ஏற்பட்டு விடும். அவர் யுக்தியோடு 'நீ பூர்ண ஆத்மா' என்று சொல்லும்போது மனதிற்கு என்னமோ சரியாகத் தான் படுகிறது.

பூரணம் என்பது எப்போதும் எல்லா இடத்தி லும் இருப்பது. உனக்கு அப்பாற்பட்டு பூர்ணம் என்று ஒன்றும் கிடையாது. பூர்ணம் வேறு, நீ வேறு என்று சொன்னால உன்னைத்தவிர்த்த அது பூர்ணமாக ஆக முடியாது, எனவே பூர்ணம் என்பது உன்னையும் சேர்த்துத் தான் இருக்க வேண்டும். ஆகையினால் பூர்ணம் என்பது வெளியில் இருந்து வருவது இல்லை. அது தன்னுள் தான் இருக்க வேண்டும். மற்ற வஸ்துக்கள் எல்லாம் ஆத் மாவைச் சார்ந்து இருப்பதால், அவைகளுக்குத் தானாகவே இருப்பு இல்லாததால் அந்தப் பூர்ணம் என்பது நீயே தான்' என்று அவர் யுக்தி பூர்வமாக நிரூபிக்கும்போது எல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் அனுபவத்தில ஒன்றையும் காணோமே? கொழுக்கட்டைப் பூர்ணத்தைத் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லையே என்று குழம்பு

வான். பூர்ணமாயிருந்த போதிலும் எனக்கு பூர்ண அனுபவம் ஏற்படவில்லையே என்ற இந்த துக்கம் சுவாமிஜியினுடைய சகவாசத்தினால் ஏற்பட்டது. சுவாமிஜி உபந்யாஸம் கேட்காமல் இருந்திருந்தால் பழைய துக்கத்தோடு போயிருக்கும். இதற்குக் காரணம் என்னவென்றால், இவன் மனம் துக்கமாக இருக்கும்போது அவனிடம் 'நீ பூர்ணன்' என்று சொன்னால் மனதில் ஒன்றும் ஏறாது. அப்படி ஏறினாலும் சுவாமிஜியினுடைய சாமார்த்தியத்தினால் கொஞ்சம் புரிந்தது போல் இருக்கும். ஆமாம் என்று தலையை ஆட்டுவான். ஆனால் தன்னைப் பூர்ணமாகப் பார்க்க முடிவது இல்லை. இதற்குக் காரணம் ராகத்துவேஷங்கள் தான். இவைகளே ஞான ப்ரதிபந்தங்களாகும். இந்த ராகத்துவேஷங்கள் நம்மிடம் அடங்கி இருப்பதற்குப் பதிலாக, நம்மை அது அடக்கி வைத்துக் கொண்டு நமக்கு துக்கத்தைக் கொடுக்கின்றது. இவ்விதம் ராகத் துவேஷத்திற்கு உட்பட்டு துக்கநிலையில் இருக்கும் ஒருவனுக்கு வேதாந்தம் கூறினால் ஒன்றும் புரியாது. எனவே முதலில் நாம் ராகத் துவேஷத்தை நம் வசத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். பகவான் கீதையில் 'தயோர் நவசமாகச்சேத் (ராகத்வேஷங்கள் வசம் ஆகாதே) என்று மூன்றாம் அத்யாயத்தில் இதைத்தான் சொல்கிறார். 'அது சரி. இவனே ராகத் துவேஷமாகத் தான் இருக்கிறான். இதை எப்படி விடுவது என்ற கேள்வி வரும். இவனுக்குப் பூர்ணத்வ ஞானம் ஏற்பட்டால்தான் ராகத்வேஷத்தை விட முடியும். ஆனால் ராகத்வேஷம் போனால் தான் பூர்ணத்வ ஞானம் ஏற்படும்.

இதற்கு ஒரு உதாரணம். ஒருவனுக்குப் பைத்தியம் ஏற்பட்டிருந்தது. அவனை டாக்டரிடம் காட்டினார்கள். டாக்டர் சொன்னார், "பையன் நன்றாகத்தான்

இருக்கிறான். பைத்தியம் தெளிய வேண்டும் என்றால் கல்யாணம் செய்து வைக்க வேண்டும். பின்பு எல்லாம் சரியாகி விடும். அவனுக்குக் கல்யாணம் தான் வேண்டும்.'' ஆனால் இவன் பைத்தியம் என்ற விஷயம் எல்லோருக்கும் தெரியும். இவனுக்கு யார் பெண் கொடுப்பார்கள்? முறை வீட்டில் எல்லாம் பெண் கேட்டார்கள். "பெண் கொடுக்க எங்களுக்கு விருப்பம் தான். ஆனால் பைத்தியம் தெளியட்டும். பின்னால் கொடுக்கிறோம். இப்போது கொடுக்க முடியாது என்று அவர்கள் கூறிவிட்டார்கள். இப்போது பைத்தியம் எப்படித் தெளியும்? கல்யாணம் ஆனால்தான் பைத்தியம் தெளியும். ஆனால் பைத்தியம் தெளிந்தால் தான் கல்யாணம் ஆகும். இதற்குத்தான் "அன்யோன்ய ஆஸ்ரயம்'' என்று பெயர். ஒன்றை நம்பி மற்றொன்றும் அந்த மற்றொன்றை நம்பி இந்த ஒன்றும் இருக்கிறது. இதில் எல்லாவிதக் கஷ்டங்களும் இருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில் தான். பகவான் கர்ம யோகத்தைப் பற்றிக் கூறுகிறார். முன்னால் நீ ராகத் வேஷத்தை விட வேண்டாம். ஆனால் அதன் கையில் அகப்பட்டுக் கொள்ளாதே'' என்று சொன்னார். ஆனால் எப்படி? இந்த ராகத்வேஷத்தின் கையில் அகப்பட்டுக் கொண்டுதானே தப்ப முடியாமல் கஷ்டப்படுகிறேன். இதிலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்வது? ராகத் வேஷத்தை வைத்துக்கொண்டு அதன் வசம் இல்லாமல் இருப்பது எப்படி?'' என்ற கேள்வி எழும். இதற்கு பதிலாகத் தான் கர்மயோகம் இருக்கிறது.

கர்மயோகத்தில் இரண்டு விஷயங்கள் இருக்கின்றன. ஒன்று கர்மா. மற்றொன்று கர்மபலன். ராகத்துவே

ஷங்கள் இருப்பதினுல் நாம் தர்மங்களைச் செய்கின்ருேம். அந்த கர்மத்தைப் பற்றியும் அதன் பலனைப் பற்றியும் சில உண்மைகளை நாம் தெரிந்து கொண்டால் அந்த ராகத் துவேஷத்தின் கையில் நாம் சிக்கிக் கொள்ள மாட்டோம். நமக்கு கர்மத்தினிடத்திலும், கர்மத்தினால் ஏற்படும் பலன்களிடத்திலும், சரியான பாவனை இருந்தால் ராகத் துவேஷங்கள் துக்கத்தைக் கொடுக்காது. ராகத் துவேஷங்களுக்கு உட்படாமல் இருப்பது என்ன வென்ருல், ராகத்துவேஷங்கள் இருந்தபோதிலும், அவை களால் நமக்குத் துக்கம் ஏற்படாமல் இருக்கக் கூடிய ஒரு சூழ்நிலையை மனதில் உருவாக்கிக் கொள்வதுதான். எனவே ராகத்துவேஷங்களை விட்டு விடு என்று சொலவது சாத்யமான கார்யம் இல்லை. ராகத்துவேஷத்தினுல் துக்கத்தை அடையாமல் இருக்க என்ன வழி என்று கேட்டால் அதற்குத்தான் கர்மாவைப் பற்றியும் கர்ம பலன்களைப் பற்றியும் சில உண்மைகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஸ்ரீமத் பகவத் கீதையில் இதைத் தான் கர்மயோகம் என்று சொல்கிருர்கள். இந்தக் கர்ம யோகத்தினுல் நாம் ராகத்துவேஷங்களிடமிருந்து நமக்கு துக்கத்தைக் கொடுக்கக் கூடிய சக்தியை எடுத்து விடுகிருேம். சிலர் "நீ கர்மாவைச் செய். ஆனுல் பலனை எதிர்பார்க்காதே என்று கூறுவார்கள். இது தவறு. பலனை எதிர்பார்க்காமல் யாருமே காரியம் செய்ய முடியாது. "பிரயோஜனம் அனுத்திச்ய மந்தோ பி, ந ப்ரவர்த்ததே" என்று ஒரு வசனம் இருக்கிறது. இதில் உண்மை இருக்கிறது. இதன் பொருள்: பிரயோ ஜனத்தை எதிர்பார்க்காமல் முட்டாள் கூட ஒரு காரியத் தில் இறங்க மாட்டான். முட்டாள் என்ருல் மந்த புத்தி உள்ளவன் என்று அர்த்தம். அதனுல் கர்மாவைப் பலனை எதிர்பாராமல் செய்வது என்பது கிடையவே

கிடையாது. நாம் நடக்கும்போதுகூட, ஒரு காலை எடுத்து ஒரு அடி முன் வைக்கும்போது 'நான் இப்படிச் செய்தால் முன்னால் போவேன், என்ற பலனை எதிர் பார்த்துத்தான் காலை முன் வைக்கிறோம். எனவே "கர்மாவைச் செய். பலனை எதிர்பாராதே" என்று சொல்வதெல்லாம் அனர்த்தம். கர்மயோகத்தின் சரியான அர்த்தத்தை இங்கு விசாரிப்போம்.

ராகத்துவேஷங்கள் எல்லோருக்கும் இருக்கிறது. இவைகளினால் என்ன ஏற்படுகிறது? ராகத்துவேஷங் களைப் பூர்த்தி செய்ய நாம் கர்மாக்களைச் செய்கிறோம். அந்தக் கர்மாக்களைப் பலனை எதிர்பார்த்துதான் செய் கிறோம். கர்மாவிற்குப் பலன்கள் நான்கு வகையானவை.

அவைகள்:

1. எதிர்பார்த்தபடி கிடைக்கும் பலன்.
2. எதிர்பார்த்ததற்கு மேல் கிடைக்கும் பலன்.
3. எதிர்பார்த்ததற்குக் குறைவாய்க் கிடைக்கும் பலன்
4. எதிர்பார்த்ததற்கு நேர் எதிரான பலன்.

இவ்விதம் நான்கு விதமான பலன்கள் கர்மாவினால் ஏற்படலாம். பணத்தை வட்டி கிடைக்கும் என்ற பலனை எதிர்பார்த்து ஒருவன் கொடுத்தான். இருபத்து ஐந்து சதவீதம் வட்டி வர வேண்டும் என்று எதிர்பார்த் தான். அவனுக்கு எதிர்பார்த்தபடி 25% வட்டி கிடைக்க லாம். அல்லது அதற்கு மேலாக 50% ஆகவோ, அதற்குக் குறைவாக 10% ஆகவோ கிடைக்கலாம். அல்லது முதலே போய் நஷ்டம் ஏற்படலாம். இவ்விதம் நான்கு விதமான பலன்கள் எந்தக் கர்மாவிற்கும் ஏற்படலாம்.

ஆனால் யாருக்காவது நஷ்டம் அடைய வேண்டும் என்றோ எதிர்பார்ப்பதற்குக் குறைவாகப் பலன் கிடைகக வேண்டும் என்றோ எண்ணம் உண்டா? இல்லை. எதிர் பார்த்தது கிடைக்க வேண்டும். அல்லது எதிர் பார்ப் பதற்கு மேல் கிடைக்க வேண்டும் என்றே எல்லாரும் விரும்புகிறார்கள். ஆனால் எதிர்பார்த்ததற்குக் குறைவாக வோ அல்லது நேர் எதிராகவோ பலன்கள் வந்து கொண்டு தான் இருக்கின்றன. இதன் காரணம் என்ன வென்றால் நமக்கு உள்ள ஞானமானது அல்பமானது. நமக்குப் பூர்ண ஞானம் இல்லை. உதாரணமாக நாம் பாதையைக் கடந்து எதிர்ப்பக்கம் செல்ல விரும்புகிறோம். இதில் 'எதிர் புறத்தைச் சேர்ந்துவிடுவோம்' என்ற பலனை எதிர் பார்த்துத் தான் பாதையைக் கடக்கிறோம். 'நான் பத்திரமாகப் போய்ச் சேரமாட்டேன்' என்று யாரும் எண்ணுவது இல்லை. ஆனால் சில சமயம் எவ்வளவோ இடைஞ்சல்கள் ஏற்படலாம். திடீரென்று இருதயநோய் வந்தோ அல்லது எதிர்பாராத ஆட்டோ ரிக்ஷா வந்து இடித்து விபத்து ஏற்பட்டோ, மறுபக்கம் சேர முடியா மல் போய்விடுகிறது. பாதையைக் கடக்கும் இந்தச் சிறு செயலில்கூட நாம் எதிர்பார்த்த பலன் நமக்குக் கிடைக் காமல் போய்விடுகிறது. ஆகையினால் நாம் எதிர்பார்த்த படி பலன் வர வேண்டும் என்ற நியதி ஒன்றும் கிடை யாது. ஏனென்றால் நமக்குப் பூரண ஞானமும் சக்தியும் இல்லை.

நமக்குப்பூரண ஞானமோ சக்தியோ இருந்தால் எதை எப்படி எப்போது செய்ய வேண்டுமோ அதை அப்படிச் செய்து விருப்பம் உள்ளவைகளை அடையலாம். பூரண ஞானம் இருந்தால் முன்கூட்டியே இப்படி எல்லாம்

ஏற்படும் என்று தெரிந்துவிடும். நமக்கு இந்தப் பூரண ஞானம் இருந்தால் முன்கூட்டியே இப்படி எல்லாம் ஏற்படும் என்று தெரிந்துவிடும். நமக்கு இந்தப் பூரண ஞானம் கிடையாது. ஓரளவு ஞானம் இருந்தாலும் சக்தி கிடையாது, உதாரணமாகப் புயல், அடிப்பதற்கு முன் பத்திரிக்கையில். 'மதராஸ், ஆந்திரா கரையோரத்தில் இன்று மாலை பெரிய புயல் அடிக்கப் போகிறது' என்று பிரசுரித்திருப்பார்கள். இந்த புயல் அடிக்கப் போகிறது என்ற ஞானம் முன்கூட்டியே தெரிகிறது. ஆனால் நாம் என்ன செய்ய முடியும்? பயிர்களையோ, மரங்களையோ எடுத்து வீட்டிற்குள் வைத்துக் கொள்ள முடியுமா? நமக்கு ஞானம் இருந்த போதிலும் தடுப்பதற்குச் சக்தி இல்லை. ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் சக்தி இருந்தாலும் ஞானம் இருப்பதில்லை. சமீபத்தில் (டிசம்பர் 1984) போபால் விஷ வாயு பரவலினால் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்து போன விஷயம் எல்லோருக்கும் தெரியும். இந்த விஷயத்தில் 'விஷ வாயு வெளிப்படும். அதனால் அனேக மக்கள் இறக்கப் போகிறார்கள்' என்று முன்னமேயே தெரிந்து இருந்தால், அதைத் தடுத்திருக்கலாம். ஆனால் இங்கு அந்த ஞானம் இல்லாததினால் சக்தி இருந்தும் குறிப்பிட்ட சம்பவத்தைத் தடுக்க முடியவில்லை. இந்த மாதிரி அல்ப ஞானத்தையும் அல்ப சக்தியையும் உடைய நாம் என்ன என்னவோ திட்டங்களைப் போடு கிறோம். நாம் நினைத்த பலன் நாம் செய்யும் கர்மாவிற்குக் கிடைக்குமா, கிடைக்காதா என்பது நிச்சயம் இல்லை இந்த நிச்சயம் இல்லாமல்தான், கர்மாக்களைச் செய்கிறோம். நமக்கு ராகத்துவேஷங்கள் இருப்பதினால், நாம் கர்மா செய்துதான் ஆகவேண்டும். ராக துவேஷங்களை வைத்துக் கொண்டு நாம் சும்மா இருக்க முடியாது. ஆதலால்,

இந்த ராகத்துவேஷங்களைப் பூர்த்தி செய்வதற்காக நாம் ஏதாவது கர்மா செய்துதான் ஆக வேண்டும். எதை வேண்டும் என்று நினைக்கிறோமோ அதை அடைவதற்கும், எதை வேண்டாம் என்று நினைக்கிறோமோ அதைத் தடுப்பதற்கும் நாம் பிரயத்தனம் செய்துதான் ஆக வேண்டும். இதில் பலனை எதிர்பார்த்துத்தான் நாம் கர்மாக்களைச் செய்கிறோம். இந்தப் பலன் முன்னால் சொன்ன நான்கு வழிகளில்தான் வரும். நாம் விரும்பிய பலன் வரும்போது மனம் சுகத்தை அடைகிறது. வேண்டியதை அடைந்துவிட்டோம் என்று ஆனந்தம் ஏற்படுகிறது. நாம் அடைய விரும்பியதை அடைய முடியாதபோது துக்கமும், ஆத்திரமும் ஏற்படுகிறது. இவ்விதம் சுகமும் துக்கமும் மாறி மாறி வருகிறது. இந்த சுகதுக்கச் சூழலுக்குத்தான் சம்சாரம் என்று பெயர். இதிலிருந்து விடுபடும் வழியைப் பகவான் கீழ்க்காணும் ஸ்லோகத்தில் கூறுகிறார்.

"கர்மண்யேவாதிகாரஸ்தே மாபலேஷு கதாசன!

மா கர்ம பல ஹேதுர் பூ மா தே ஸங்கோஸ்த்வ கர்மணி''

தே – உனக்கு கர்மணி ஏவ – கர்மாவில் (மட்டும்) தான் அதிகார:– அதிகாரம் (ஸ்வதந்திரம்) இருக்கிறது. கதாசன – ஒரு போதும், பலேஷு – பலன்களில் மா – இல்லை. இது முதல் வரியின் அர்த்தம். ஏன் கர்மாவில் மட்டும்தான் நமக்கு அதிகாரம் இருக்கிறது? ஏனென்றால் ஒரு காரியத்தை நாம் செய்யலாம், அல்லது செய்யாமலும் இருக்கலாம் அல்லது வேறு தினுசாகவும் செய்யலாம். உதாரணமாக தினம் கோவிலுக்குப் போவதை எடுத்துக்

கொள்வோம். விரும்பினால் நாம் கோவிலுக்குப் போக லாம். அல்லது கோவிலுக்கு போகாமல் வீட்டிலேயே இருக்கலாம். மேலும் கோவிலுககுப் பதில் சினிமாவுக்குப் போகலாம். இந்த ஸ்வதந்த்ரம் மனிதனுக்கு இருக் கின்றது. இது பிராணிகளுக்குக் கிடையாது. பிராணி களுக்குச் செயல் செய்வதற்குத்தான் ஸ்வதந்த்ரம் இருக் கிறதே ஒழிய, செய்யாமல் இருப்பதற்கு ஸ்வதந்த்ரம் இல்லை. கழுதை உதைக்க வேண்டும் என்று நினைத்தால் உதைத்து விடும். 'நாய் குரைக்க வேண்டும் என்று நினைத்தால் குரைத்துவிடும். "இப்போது யஜமானர் த்யானத்தில் இருக்கிறார். ஆகவே குரைக்கக்கூடாது' என்று நினைக்காது. பிராணிகளுக்குத் தன் ஸ்வபாவ மான காரியத்தைச் செய்வதில்தான் ஸ்வதந்த்ரம் இருக் கிறதே தவிர, இதைச் செய்யலாம், இதைச் செய்யக் கூடாது, என்று விசாரிக்கும் சக்தி கிடையாது.

மனிதனுக்கு புத்தியும், விவேகமும் இருப்பதினால்' செய்ய வேண்டும் என்று நினைத்தாலும் கூட, வேண்டாம் என்று கட்டுப்படுத்திக் கொள்ள முடியும். ஒரு குறிப் பிட்ட இடத்திற்கு இவன் காரில் போய்க் கொண்டு இருப் பான். எதிரில் 'இவ்வழியில் கார்கள் செல்லக்கூடாது, என்று எழுதி இருக்கும். அதைப் படித்தவுடன், சுற்று முற்றும் பார்ப்பான். பிடிப்பதற்கு யாரும் இல்லை. விரைவில் போய்விடலாம்' என்ற ஆசை ஏற்படும். ஆனா லும், 'இந்த வழியே போகக்கூடாது என்று தடுக்கப் பட்டுள்ளபோது போகவேண்டாம்' என்று எண்ணிக் கட்டுப்படுத்திக் கொள்ளும் சக்தி இவனுக்கு உள்ளது. இதைத்தான் "கர்த்தும் (செய்வதற்கும்), அகர்த்தும் (செய்யாமல் இருப்பதற்கு) அன்யதா வா கர்த்தும் (வேறு

நினுசாகச் செய்வதற்கும்) சக்யம் (முடியும்) என்று சொல்வார்கள். இதற்குப் பெயர்தான் விவேக சக்தி. என்பது இது மனிதனுக்கு உள்ள கர்த்ருத்வம் அல்லது ஸ்வதந்த்ரத்வத்தைக் குறிக்கிறது. இவன் ஸ்வதந்த்ரனாக இருப்பதால் கர்மாவை எப்படி வேண்டுமானாலும் செய்யலாம். இவ்விதம் கர்மா செய்வதில் எல்லோருக்கும் அதிகாரம் உண்டு. ஆகையால் ராகத்வேஷங்கள் இருப்பதால் அவைகளுக்குத் தகுந்த மாதிரி ஒவ்வொருவரும் திட்டமிட்டுச் சரியாகக் கர்மாக்களைச் செய்யலாம். ஆனால் பலன் இருக்கின்றதே அதில் உனக்கு அதிகாரம் இல்லை என்று பகவான் சொல்கிறார். இந்தக் கருத்தைச் சிலர் தவறாக அர்த்தம் செய்து கொள்கிறார்கள். பலனை எதிர் பார்க்காதே என்று அவர்கள் கூறுகின்றார்கள். இது தவறு. "மா பாலஷு"கதாசன என்பதற்குப் பலனைப் பற்றிய விஷயத்தில் (உனக்கு அதிகாரம்) இல்லை என்று தான் அர்த்தம். இது ஒரு உண்மை.

இப்போது என் கையில் ஒரு சிறிய கல் இருந்தால் அதை நான் கையிலேயே வைத்துக் கொண்டு இருக்கலாம். அல்லது மேலே தூக்கிப் போடலாம். கல்லை மேலே எறிந்தவுடன் அதனால் ஏற்படக் கூடிய விளைவுகளை மாற்ற எனக்கு அதிகாரம் இல்லை. 'கல்லே! கீழே வராதே! என்று சொன்னாலும், பூமியின் ஆகர்ஷண சக்திக்கு உட்பட்டு அது கீழே விழத்தான் செய்யும். என் காலின் மேலேயே வந்து விழலாம். காற்று எப்படி வீசுகிறதோ அந்தத் திசையில் விழும். விழுகின்ற இடத்தில் யாராவது இருந்தால் அவர்கள் தலை மேலும் விழலாம். அப்படி இருக்கும் போது, இந்தப் பலன் விஷயத்தில் யார் என்ன செய்ய முடியும்? பிராயச்சித்த கர்மா

தான் செய்ய முடியும். அதாவது மற்றோர் கல்லை எடுத்து அதனால் முன்னால் எறிந்த கல்லை அடித்து மேலே விழாமல் திருப்பலாம். இங்கு இரண்டாவது கல்லின் வேகம் அதிகமாக இருக்க வேண்டும். இப்படிச் செய்வதற்கு வேண்டிய சக்தி ஒருவனுக்கு இருக்குமானால் இவ்விதம் செய்யலாம். இதற்குப்பெயர் பிராயச்சித்த கர்மா. இம்மாதிரி கர்மா சில இடங்களில் முடியும். டாக்டர்கள் ஒரு மருந்தினால் ஏற்படும் தவறை (விபரீத விளைவுகளை) வேறு மருந்தினால் மாற்றுவார்கள். ஒவ்வொரு சமயத்தில் தவறாய்க் கொடுத்த சிகிச்சையை இவ்விதம் மாற்றலாம். ஒரு தவறு செய்து விட்டால் அதைத் திருத்திக் கொள்ளச் செய்யும் கர்மாக்களுக்குப் பிராயச் சித்த கர்மா என்று பெயர். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். நீ கர்மா செய்தவுடன் அதன் பலன் நிச்சயமாகக் கிடைத்து விடும் என்பதுதான். அந்தப் பலன் கர்மாவிற்கு ஏற்ற மாதிரிதான் இருக்கும். இந்தப் பலன் எங்கிருந்து வருகிறது என்பதைப் பற்றி பகவான் கீதையில் என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம்.

எல்லாக் கர்மாக்களுக்கும் நான்தான் பல ஹேது. நான்தான் கர்ம பலதாதா (கொடுப்பவர்) என்கிறார் ஈசுவரன். நீ கல்லை மேலே தூக்கிப் போட்டால் அது பூமியின் ஆகர்ஷண சக்தியினால் கீழே வருகிறது. அந்த ஆகர்ஷண சக்தியானது என்னுடைய நியதி. அது உன்னுடைய நியதி அல்ல. அந்தக் கல் கீழ்நோக்கி வரும் வேகத்திற்கு ஏற்ப அதன் விளைவுகள் (காயங்கள் முதலியன) ஏற்படும். இதில் நீ ஒன்றும் செய்வதற்கு இல்லை. அதேபோல் அடுப்பில் தண்ணீரை 100° உஷ்ணம் வந்தவுடன் அத்தண்ணீர் கொதிக்கின்றது. இது யாருடைய நியதி? யாரால் இந்த உலகம் படைக்கப்

பட்டதோ அவரால் ஏற்படுத்தப்பட்ட நியதி இது. எல்லா நியதிகளுமே இப்படித்தான் ஆகையால் உலகத்தில் இருக்கக் கூடிய எல்லா நியதிகளின் படியே கர்மாக்களின் பலன்கள் நமக்கு ஏற்படுகிறது. இந்த நியதிகளைப் பற்றி மேற்கொண்டு விசாரம் செய்யும் போது ஈசுவரனே எல்லா நியதிகளாக இருக்கிறார் என்பது தெரியவரும். இந்த உண்மை, இந்து மத சமய நூல்களான வேதங்களில் சொல்லப்பட்ட ஈச்வரதத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது.

ஈச்வரதத்துவம்:-

பிரசித்தமாக இருக்கக்கூடியசில மதங்களில் ஈச்வரனை ஒரு 'சிருஷ்டி' ஸ்திதி லய' கர்த்தாவாகப் பார்க்கிறார்கள். இம்மாதிரிப் பார்க்கும்போது "இந்தக் கர்த்தா எங்கு இருக்கிறார்? எந்தப் பொருளை வைத்து இந்த உலகத்தை உண்டு பண்ணினார்? என்ற பலவிதமான கேள்விகள் எழும்.

குயவன் மண் இல்லாமல் பானையை செய்ய முடியாது. அவனுக்கு ஒரு இடம் இருக்கவேண்டும். அது மாதிரியே ஈச்வரனும், ஒரு இடத்தில் இருந்தால், அந்த இடம், யாரால் உண்டாக்கபட்டது? ஈச்வரனால் என்றால் அந்த இடத்தை உண்டு பண்ணுவதற்கு முன், ஈச்வரன் எங்கு இருந்தார்? மேலும் அந்த ஈச்வரன் எந்தப் பொருளை வைத்து இந்த உலகைப் படைத்தார்" என்ற இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் நம் வேதத்தில்தான் பார்க்க வேண்டும். நம் வேதப்படி ஈச்வரனையே சிருஷ்டி கர்த்தா வாகவும், சிருஷ்டிக்கு வேண்டிய பொருளாகவும் சொல்லபபட்டிருக்கிறது.

எப்படிச் சிலந்தி தான் கட்டிய வலைக்குத் தானே கர்த்தாவாகவும், தன்னிடமிருந்தே உண்டாகிற ஒருவித திரவத்தையே மூலப் பொருளாகவும் கொண்டு விளங்குகிறதோ, எப்படி நம்முடைய ஸ்வப்பனத்தில் நாமே ஸ்வப்ன உலகத்தைச் சிருஷ்டிக்கும் கர்த்தாகவும், ஸ்வப்ன சிருஷ்டிக்குத் தேவையான மூலப் பொருள்களாகவும் இருக்கின்றோமோ, அதேவிதமாக ஈச்வரனே இந்தப்பிரபஞ்சத்தின் சிருஷ்டி கர்த்தாவாகவும், சிருஷ்டிக்கு வேண்டிய மூலப் பொருளாகவும் சக்தியாகவும் இருக்கிறார்.

இதிலிருந்து மற்றொரு உண்மையும் விளங்குகிறது. எப்படி உண்டாக்கப்பட்ட பானை அதனுடைய மூலப் பொருளாக இருக்கக் கூடிய மண்ணிலிருந்து வேறாக இல்லையோ, அப்படியே ஈச்வரனையே மூலப் பொருளாக வைத்து உண்டான இந்த உலகம் ஈச்வரனுக்கு வேறாக இல்லாமல் ஈச்வரனாகவே இருக்கிறது. என்ற இந்த உயர்ந்த தத்துவம்தான் இந்து மதத்திற்கே உரிய பெரிய உண்மை.

இந்த உண்மையை வைத்துப் பார்க்கும்போது தான், உலகத்திலுள்ள எல்லா நியதிகளுமே, சிருஷ்டிக்கப்பட்ட உலகத்தினுள் அடக்கமானதால் சிருஷ்டிக்கப்பட்ட உலகமாகவே ஈச்வரன் இருக்கிறபடியால், இந்த நியதிகளும் ஈச்வர ஸ்வரூபமாகத்தான் விளங்குகின்றன. நம்முடைய இச்சையை வைத்து நாம் செய்யும் கர்மாக்களின் பலன் இந்த நியதிகளின் படி கிடைக்கிறது. இவ்விதம் இருக்கும் போது இந்த பலன்கள் யாரிடமிருந்து தான் வருகின்றது. ஈஸ்வரன் இடம் இருந்து தான் வருகின்றது. ஈச்வரனிடமிருந்து வரக்கூடிய பொருள்களை எல்லாம் நாம் எப்படி

வைத்துக் கொள்வது? பிரசாதமாகத்தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பிரசாத புத்தி:

இந்தப் பிரசாதத்தைப் பற்றி ஒரு முக்கிய விஷயம். இந்தியா முழுவதும் எந்த இடத்திற்குச் சென்றாலும் பிரசாதம் என்றுதான் சொல்வார்கள். பிரசாதம் என்பதற்கு வேறு வார்த்தை போடவில்லை. தமிழ், தெலுங்கு கன்னடம், மராட்டி இந்தி முதலிய எல்லா பாஷைகளிலும் பிரசாதம் என்றேதான் கூறுகின்றார்கள். அது ஒரு நல்ல வார்த்தை. பிரசாதம் வரும்போதே இவனுக்கு உள்ளுக்குள் என்ன ஏற்படுகிறது? இவனுக்குப் பிரசன்னதா ஏற்படுகிறது.

ஒருவன் கோவிலுக்குச் சென்றால் பூஜை முடிந்த பின்பு இவனுக்கு என்ன கொடுப்பார்கள்? அங்கு பகவானுக்கு எதை நைவேத்யமாகச் செய்தார்களோ அதைக் கொடுப்பார்கள். அதற்குத்தான் பிரசாதம் என்று பெயர். "என்ன பிரசாதம்" என்று யாரும் கேட்பதில்லை. பிரசாதம் என்றால் கையை நீட்டி விடுவார்கள். எதைப் பிரசாதமாகக் கொடுக்கின்றார்கள் என்று தெரிய வேண்டிய அவசியம் இல்லை. புஷ்பம், விபூதி, குங்குமம், கற்கண்டு, புளியோதரை, வடை, தீர்த்தம் என்று எது கொடுத்தாலும் அது பிரசாதம் தான். கொஞ்சம் கொடுத்தாலும், அதிகம் கொடுத்தாலும் அது பிரசாதம் தான். எப்படிக் கொடுத்தாலும் அது பிரசாதம் தான்.

இப்பிரசாதத்தை எடுத்துக் கொள்ளும்போது இவனுக்கு மனம் எப்படி இருக்கின்றது? விதவிதமான

பொருள்கள், துளசி, வடை என்று கண்ணினால் பார்த்தாலும், இதற்குமேல் மனதினால் ஒன்றைப் பார்க்கிறான். அது என்ன? அதுதான் பிரசாதம். கண்ணிற்கு என்னவோ துளசி தான். ஆனால் புத்திக்கு பிரசாதம். கண்ணிற்கு என்னவோ வடை தான். ஆனால் புத்திக்கு பிரசாதம். இதிலிருந்து பிரசாதம் என்பது ஒரு பாவனை என்பது தெளிவாகிறது, பகவானிடமிருந்து வருகின்ற பொருள்கள் எல்லாவற்றையும் இவன் பிரசாதம் என்ற புத்தியோடு பார்க்கிறான். அதனால் தான் இந்த புத்திக்குப் பிரசாத புத்தி என்று பெயர். இதற்குப் புத்தி யோகம் என்றும் பெயர்.

'கோவிலில் கொடுக்கக்கூடிய பொருள்களை மட்டும் பிரசாதமாகப் பார்த்து விட்டு, பாக்கி கர்மாக்களின் பலன்களை மாத்திரம் நீ உண்டு பண்ணுவதாக நினைப்பதினால் தான் உனக்கு கஷ்டம். நான்தான் அந்தப்பலன்களையும் கொடுக்கிறேன் என்று பகவான் இங்கு சொல்கிறார். இந்த உண்மையை நாம் தெரிந்து கொண்டால் நம்முடைய அல்ப ஞானத்தினாலும், அல்ப சக்தியினாலும் கர்மாக்களைச் செய்யும்போது பலனானது நாம் எதிர் பார்த்தப்படி வரலாம், வராமலும் இருக்கலாம். எது வந்தாலும், கர்ம நியதிக்கு ஏற்றபடிதான் இருக்கும். இதில் தவறு ஒன்றும் ஏற்படாது. ஏனென்றால் ஈச்வரனுக்கு எந்தவித பேதமும் கிடையாது. எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் இருப்பதற்குக் காரணம் அந்த ஈச்வரனுக்குத்தான் தெரியும். கர்ம பலனானது ஈச்வரனிடமிருந்து வருவதினால் எல்லாக் கர்ம பலன்களுமே பிரசாதம்தான். எல்லாக் கர்ம பலன்களும் பிரசாதமாக இருக்கும்போது உள்ளுக்குள் துக்கமே இருக்காது.

அப்போது ராகத்துவேஷங்கள் ஒன்றும் செய்ய முடியாது. ராகத் வேஷங்களைப் பூர்த்தி செய்வதற்காகக் கர்மாக் களைச் செய்தபோதும் கர்மாக்களினால் ஏற்படக் கூடிய பலன்கள் வரும்போது இவன் சமசித்தம் உடையவனாக இருக்கிறான். இதையே பகவான் 'இஷ்டாநிஷ்டோ பித்திஷு நித்யம் சம சித்தத்வம்' என்று 13-வது அத்யா யத்தில் கூறுகிறார். கர்மபலனைச் சமமான புத்தியோடு எடுத்துக் கொள்வது கர்மயோகம் எனப்படும்.

இங்கு ஒருவன் இம்மாதிரிக் கேள்வி கேடகலாம் இந்த பிரசாத புத்தியினால் வாழ்க்கையில் முன்னேற முடியுமா? என்று சரி. பிரசாத புத்தி இல்லை என்று வைத்துக் கொள்வோம். இவன் எதிர்ப்பார்த்த பலன் வரவில்லை. ஆகையால் துக்கமடைகிறான். இந்தத் துக்கத்தினால் இவன் மேன்மை அடைய முடியுமோ? முடியாது. எனவே கர்ம பலனைப் பிரசாதமாக ஏற்றுக் கொண்டு அந்தப் பலனினால் ஏற்பட்ட அனுபவத்தை வைத்து, மீண்டும் கர்மாவில் எங்கே தப்பு இருக்கின்றது என்று பார்த்து வேறு சரியான விதமாகக் கர்மாவைச் செய்து வாழ்க்கையில் மேன்மை அடைகிறான்.

இதுவரை சொன்னது கர்மயோகத்தின் ஒரு பாகம் பலன் கர்மயோகம் என்பது இது பலனைப் பிரசாதரூபமாகப் பார்த்து அப்படியே ஏற்றுக் கொள்வது. அதாவது இது பலனை ஒட்டிய கர்மயோகம் என்பது! இதையே பகவான் சமத்வம் யோக உச்யதே என்று கூறுகிறார்.

கர்மயோகத்தின் இரண்டாவது பாகம்.

இது கர்மாவை ஒட்டிய கர்மயோகம். கடமை என்ற ஒரு கர்மா இருக்கின்றது. இதையும் பலனை எதிர்பார்த்து

தான் செய்ய வேண்டும். நாம் செய்யக்கூடிய கர்மாக் களைப் பொருத்த விஷயத்தில் ஒரு கடமை இருக்கிறது. இந்தக் கடமை பற்றி கீதையில் பகவான் சில விஷயங் களைச் சொல்லுகின்ருர். அதைத் தெரிந்து கொண்டால், ராகத்துவேஷத்திற்கு உட்படாமல் கர்மாக்களைச் செய்ய முடியும். இங்கும் பலனை எதிர்பார்த்துத்தான் கர்மாக் களைச் செய்யவேண்டும் ஆனல் கர்மாக்கள் கடமைக்கு உட்பட்டு இருக்க வேண்டும். இதற்குப் பெயர்' யோகம் கர்மஸு கௌசலம். என்பது. அதாவது கர்மாக்களில் ஸ்வதர்மத்தைக் கடைப்பிடிப்பதற்குக் கர்மயோகம் என்று பெயர். இது எப்படி என்று பார்ப்போம்.

முன்னல் ராகத்வேஷங்களைப் பற்றிப் பார்த்தோம் ராகம் என்பது ஒன்றை வேண்டும் என்று நினைப்பது. ஒன்றை வேண்டாம் என்று நினைப்பது த்வேஷம், இந்த இஷ்டம், அனிஷ்டம் என்ற எண்ணங்கள் இருப்பதினல் இச்சைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காகக் கர்மக் களைச் செய்கிருேம். இச்சைகள் இரண்டு வகைப்படும். வேண்டும் என்பதை அடைவதற்காகவும், அடைந்த வஸ்து க்ஷேமமாக இருக்க வேண்டும் என்பதற்காகவும் இச்சிப்பது இந்த வகையைச் சேர்ந்தது. இதேபோல அனிஷ்டமாக இருப்பதும் இரண்டு வகைப்படும். வேண் டாதது உதாரணமாக வியாதி, வர வேண்டாம் என்றும், ஏற்கனவே நம்மிடம் இருப்பது வேண்டாம் என்றும் தடுப்பதற்காக இவ்விதம் இரண்டு வகைகள். இந்த இரு வகை ராகத்வேஷங்களினல் நாம் செய்யும் கர்மாக்கள் துக்கத்தைக் கொடுக்கின்றன என்றும், பலனைப் பிரசாத மாக ஏற்றுக் கொள்வதினல் இந்த துக்கத்திலிருந்து விடுபடலாம் என்றும் பார்த்தோம்.

இதன் கருத்து என்னவென்ருல், நீ கர்ம பலத்திற்குக் கர்தாவாக ஆக வேண்டாம். அதனுல் கர்மாவைச் செய்வதில் உனக்குப் பயமே வேண்டாம். கர்ம பலத்தை எவ்விதம் ஏற்றுக் கொள்ள வேண்டுமோ அவ்விதம் ஏற்றுக் கொள்வதினுல் துக்கம் ஏற்படுவதில்லை. அந்தக் கர்மாக்களும் பந்தப்படுத்துவதில்லை. அதனுல் கர்மாவைச் செய்யாமல் இருப்பதில் உனக்கு ஆசை இருக்க வேண்டாம். இதனுல் கர்மாவைச் செய்' என்பது பொருள்.

ஒருத்தன் என்னிடத்தில் பணம் இல்லை, அதனுல் பக்கத்து வீட்டுக்காரனிடம் உள்ள பணத்தைத் திருடப் போகிறேன். அதனுல் என்ன பலன் வந்தாலும் பிரசாதமாக எடுத்துக் கொள்கிறேன். பணம் வந்தாலும் சரி ஜெயில் வந்தாலும் சரி பிரசாதமாக எடுத்துக் கொள்கிறேன். நீங்களும் கூட ராகத்வேஷத்தைப் பூர்த்தி செய்து கொள்ள கர்மாவைச் செய், ஆனுல் பலனை மட்டும் பிரசாதமாக எடுத்துக்கொள் என்றுசொல்லி இருக்கிறீர்கள். எனவே நான் மேற் கூறிய விதம் செய்யலாமா? என்று கேட்டார்.

அது அவ்விதம் செய்ய முடியாதப்பா! 'ஸமத்வம் யோக உச்யதே' யோக கர்மஸு கௌசலம்' என்று இரண்டு வகையான கர்மயோகம் இருக்கிறது. நீ ராகத்துவேஷங்களுக்கு உட்பட்டு கர்மாக்களைச் செய்யும்போது என உனக்கு சுலபமாக, சௌகர்யமாக இருக்கிறதோ அதைப் பார்க்காதே. எது சரியோ அதைச் செய். 'ஸ்வதர்மே நிதம் ச்ரேய: பரதர்மோ பயாவஹ: கடமையைச் செய்வதில் அழிவு ஏற்பட்டாலும் அதுவே சிறந்தது என்று பகவான் கூறுகிருர்.

சாமான்ய தர்மம்:-

நாம் எந்தக் காரியங்களைச் செய்யலாம். எவைகளைச் செய்யக் கூடாது என்பதும் உலகத்தின் ஒரு நியதிதான். இந்த நியதியும் ஈஸ்வர சிருஷ்டியில் உள்ளது. எது ஸ்வபாவமாக இருக்கிறதோ அதெல்லாம் ஈச்வர சிருஷ்டி. யில் இருக்கின்றது என்று அர்த்தம். நான் சாப்பிட வேண்டும் என்று ஆசைப்பட்டால் அது தனிப்பட்ட ஆசை இல்லை. இது எல்லோருக்கும் இருக்கக்கூடிய ஆசை. எல்லோருக்கும் பசி, தாகம் முதலியன இருக்கக் கூடியது. இதுவும் ஈச்வர சிருஷ்டி தானே, ஒருத்தருக்கு மட்டும் பசி, தாகம் முதலியன இருக்கிறது என்றால் அப்போது அது ஈச்வர சிருஷ்டி ஆகாது என்று சொல்லலாம். பூமிக்கு ஆகர்ஷண சக்தி இருக்கின்றது. எனவே ஒரு வஸ்துவை மேலே தூக்கிப்போடும்போது அது கீழே விழுகின்றது. இது நம்மால் ஏற்படுத்தப்பட்டது அல்ல. இவ்விதம் ஸ்வபாவமாகவே ஈச்வர சிருஷ்டியில் இருக்கக்கூடிய ஒரு நியதி. இவ்விதம்பசி, தாகம், தர்மாதர்மங்கள் முதலான பல ஈச்வர விஷயங்கள் சிருஷ்டியில் ஸ்வபாவமாகவே இருக்கின்றன.

இதேபோலச், சில விஷயங்களை நாம் பிறரிடமிருந்து எதிர்பார்க்கும்போது, அதையே அவர்களும் நம்மிடமிருந்து எதிர்பார்த்தால் அதற்கு என்ன அர்த்தம்? நாம் எதை எதிர்பார்க்கிறோமோ அது ஈச்வர சிருஷ்டி என்று தான் அர்த்தம். என்னை யாரும் இம்சிக்கக் கூடாது என்ற எண்ணம் உனக்கு இருக்கின்றது. இந்த இம்சை மூன்று வகையானது. மனம், வாக்கு, காயம் என்ற மூன்று வகை யாலும் யாரும் என்னை இம்சிக்க கூடாது என்ற எண்ணம் உங்களுக்கு இருக்கிறது. இதேபோல் பக்கத்தில் இருப்ப

வனுக்கும் 'என்னை யாரும் மூன்று கரணங்களாலும் இம்சிக்கக் கூடாது' என்ற எண்ணம் இருந்தால் இந்த அஹிம்சை என்ன தர்மமாகிறது? அது உலக தர்மமாகிறது. அதுவும் ஒரு நியதியாக மாறிவிடுகின்றது. எல்லோரும் நினைப்பதனால் இதை யாரும் சொல்லித்தர வேண்டியதில்லை. இந்த தர்மம் தெரிந்து கொள்ள, இதை படிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

'என்னுடைய பொருளை யாரும் திருடக்கூடாது என்று ஒவ்வொருவரும் நினைக்கிறோம். அதேபோலத் திருடனும்கூட நினைக்கிறான். இரண்டு திருடர்கள் இரவு திருடிய செல்வத்தைச் சமமாகப் பங்குபோட்டுக் கொள்ள ஜனசஞ்சாரமற்ற இடத்திற்குச் சென்றனர். திருடிய சொத்தைப் பங்கு போட்டுக் கொண்டதும் அதில் ஒருவன் நான் கிராமத்திறகுச் சென்று உனக்குச் சாப்பிடுவதற்காக இட்லி, தோசை வாங்கி வருகிறேன். நீ இங்கேயே பத்திரமாகப் பணத்தை எல்லாம் பார்த்துக்கொள் என்று சொல்லிவிட்டுச் சென்றான். திரும்பி வந்து பார்க்கும்போது அந்த ஆளையே காணவில்லை. இவன் பங்கையும் எடுத்துக்கொண்டு அவன் போய்விட்டான். உடனே இவனுக்குக் கோபம் வந்து விட்டது. "என்னுடைய சொத்தை இவன் எப்படி எடுத்துக் கொண்டு போக முடியும். இப்போதே அவனை ஒரு கை பார்க்கிறேன்" என்று அவனைத் தேடிச் செல்கிறான். திருடிக் கொண்டு வந்து நான்கு மணி நேரம் தான் ஆகிறது. அதற்குள் அந்தச் சொத்து இவனுடையதாகி விட்டது. செல்வத்தைப் பறிகொடுத்தவர், என் சொத்தை யாரோ எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்! என்று போலிசாரிடம் புகார் செய்து கொண்டிருக்கும் சமயத்தில் திருடியவன், 'என் சொத்தை எப்படி மற்றவன் திருடிக்

கொண்டு போகமுடியும்! என்று கூறுகிறான். இதனால் என்ன தெரிகிறது? திருடனுக்குக்கூடத் தன் சொத்தை யாரும் திருடிக் கொண்டு போக வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. திருடன் தன்னிடம் யாரும் பொய் சொல்லக்கூடாது என்றுதான் நினைக்கிறான். எனவே தான் திருடன் கத்தியைக் காட்டிச் சாவி எங்கே? பணம் எங்குள்ளது. உண்மையைச் சொல் என்கிறான். அவன் கூட உண்மையைத்தான் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறான். எல்லோருமே மற்றவர்கள் தன்னிடம் உண்மையைச் சொல்ல வேண்டும் என்று தான் எதிர் பார்க்கிறார்கள். யாரும் பொய்யை எதிர்பார்க்கவில்லை. இவ்விதம் சத்யம் என்றும், அஹிம்சை என்றும், அஸ் தேயம்(திருடாமை) என்றும் பல தர்மங்கள் பொதுவாக இருக்கக்கூடியவை. இவை நம்முடைய சிருஷ்டி அல்ல. ஈச்வரனுடைய சிருஷ்டியேயாகும்.

சிருஷ்டிக்கப்பட்ட பொருளும் சிருஷ்டித்த கடவுளும் ஒன்றே என்று பார்த்தோம் அதன்படி மேற்கூறிய நியதி யும்(ஸாமான்யதர்மங்கள்) ஈச்வர சொருபமேதான். இவ் விதம் ஈச்வர சொரூபமாக இருக்கக் கூடிய தர்மா தர்ம நியதிகளைத் தள்ளி விட்டு முரண்பாடான கர்மாக்களைச் செய்தால் அதனால் உனக்கு என்ன ஏற்படும்? உனக்குப் பயமும் வியாகூலமும்தான் ஏற்படும்.

'மற்றவர்கள் தன்னிடம் எப்படி நேர்மையாக நடந்து கொள்ள வேண்டும்' என்று உலகத்தில் உள்ள எல்லோருக்குமே தெரியும். 'யாரும் பொய் சொல்லிடக்கூடாது. எல்லோரும் என்னிடம் அன்பாக இருக்க வேண்டும். எனக்கு உதவி செய்ய வேண்டும். யாரும் என்னிடம்

கோபம் கொள்ளக் கூடாது. எல்லோரும் சிநேகமாக இருக்க வேண்டும்', என்ற இவ்வித விஷயங்களில் உலகத்தில் யாருக்கும் சந்தேகமே கிடையாது. உலகம் என்னோடு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதில் யாருக்குமே சந்தேகமே கிடையாது. ஆனால் நான் உலகத்தோடு எப்படி நடந்து கொள்வது என்பதில்தான் சந்தேகம். இதிலிருந்து என்ன தெரிகின்றது என்றால் 'நல்லது எது? என்று யாரும் கற்றுக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்பது. ஆனால் இவனுடைய செயல் வரும்போதுதான், அவைகளைக் கடைப்பிடிப்பதில்லை. உதாசினம் செய்துவிடுகிறான். பிறர் பொய் சொல்லக் கூடாது என்பான். ஆனால் இவன் மட்டும் தன் லாபத்திற்காகப் பொய் சொல்லுவான். ஒரு பொய் சொன்னால் நூறு ரூபாய் கிடைக்கும் என்றால் இவன் பொய் சொல்லி விடுவான். சிலர் நூறு ரூபாய்க்குப் பொய் சொல்ல மாட்டார்கள். ஆயிரம் ரூபாய்க்குப் பொய் சொல்லுவார்கள். சிலர் ஆயிரம் ரூபாய்க்குப் பொய் சொல்ல மாட்டார்கள். ஆனால் ஒரு லக்ஷம் வருமானால் பொய் சொல்லுவார்கள். இவ்விதம் ஒவ்வொருவருக்கும்பொய் சொல்லுவதற்கு ஒரு பரிசு இருக்கிறது,'இவ்வளவு பணம் வந்தால் நான் உண்மையை விட்டுவிடுகிறேன்.' என்று. ஆகையால் பணத்திற்குதான் இவன் மதிப்புக் கொடுக்கிறானே தவிர, உண்மைக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. இது ஏன்? விசாரம் இல்லாததினால்தான். இவன் பணம் வேண்டும் என்று நினைக்கிறான். பணம் வேண்டியது தான். ஏனென்றால் பணத்திற்கு ஈடுபணம் தான். பணத்தினால் அடையக் கூடியதைப் பணத்தினால்தான் அடைய முடியும். ஆனால் அந்தப் பணம் யாருக்காக? பணம் எனக்காகவா அல்லது பணத்திற்காகவா என்

பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். பணம் ஒருவனைப் பெரியவனுக்காது. நீ பெரியவனுக இருந்தால் பணம் வந்தால் உனக்கு உபயோகப்படும். நீ சிறியவனுக இருந்து பணம் வந்தால் உனக்கும் கஷ்டம் பிறருக்கும் கஷ்டம். பணம் வந்தால் எல்லாம் வாங்கி அனுபவிப்பேன் என் பான். யார் அனுபவிப்பது? இவனுடைய மனம் அனுப விக்கக் கூடியதாக இருந்தால்தானே முடியும். இவனுக்குத் தான் உள்ளுக்குள்ளே பொய் சொன்னேமே என்று பயம் இருக்கிறதே, அதுதான் அசாந்தம். அசாந்தம் தான் அவன் பணத்தினுல் பெற்ற பரிசு. சாந்தி இல்லா விட்டால் அந்தப் பணம் எதற்காக?

சாந்தி இல்லாமல் வாழ்க்கையில் ஒரு சுகத்தையும் அடைய முடியாது சாதாரண இந்திரிய சுகத்தை அடைய வேண்டுமென்றாலும்கூட, இவனுக்கு மனம் சாந்தமாக இருக்க வேண்டும். இதைத்தான் தியாகராஜஸ்வாமிகள் தன் கிருதியில் சொன்னுர்.

"சாந்தமுலேக சௌக்யமுலேது
சாந்தனுக்காயினு வேதாந்தனுக்காயினு...
சாந்த மூலேக சௌக்ய முலேது என்று.

அந்த சாந்தி இல்லாமல் பெரிய யோகியாகவோ அல்லது வேதாந்தியாகவோ இருந்தால் அதனுல் ஒரு பிரயோஜன மும் இல்லை. இங்கு வேதாந்தி என்ருல் எல்லா வேதாந்த சாஸ்திரங்களையும் நன்ருகப் படித்து வார்த்தை களை மட்டும் தெரிந்து வைத்து கொண்டு இருப்பவன் என்று அர்த்தம். எனவே சாந்தமில்லாவிட்டால் உனக்கு சௌக்யம் இல்லை.

அப்படிப்பட்ட சாந்தியை நாம் ஈடாகக் கொடுத்து சம்பாதிக்கும் பணம் எதற்குப்பிரயோஜனமாகும்? ஒருவன் இறக்கப்போகும் சமயத்தில் பிராணவாயு வேண்டியதாக இருந்தது. அப்போது ஒருவன் உனக்குப் பிராணவாயு தருகிறேன். ஆனால் உன்னுடைய உயிரை எனக்குக் கொடுத்து விட வேண்டும் என்று சொன்னான். இதனால் என்ன பிரயோஜனம்? எந்தப் பணத்தினால் நாம் சாந்தியை அடைய விரும்புகின்றோமோ அந்த சாந்தியையே நாம் அதற்கு ஈடாகக் கொடுத்துவிட்டால் அந்தப் பணத்திற்கு என்ன மதிப்பு இருக்கிறது?

மேலே சொன்ன சாமான்ய தர்மாதர்மங்கள் வேதத்தினாலோ தர்மசாஸ்திரங்களினாலோ சொல்லப்பட்டது அல்ல. (தர்மம் என்பது நாம் பிறரிடம் எதிர்பார்ப்பது எதுவோ அது. அதர்மம் அதற்கு எதிரானது) இது ஈச்வர நியதியாகத்தான் இருக்கிறது. தர்ம சொரூபமாகவே இருக்கிறான் ஈச்வரன். அதற்குக் காரணம் என்னவென்றால் சிருஷ்டியும் சிருஷ்டி கர்த்தாவான ஈச்சவரனும் வேறு அல்ல. ஆகையால் சாமான்ய தர்மங்கள உலக தர்மமாகவே இருப்பதினால் அது ஈசுவரனுடைய சிருஷ்டித் தான். எப்படிப் பசி, தாகம் முதலியன ஈச்வர சிருஷ்டியில் எல்லோருக்கும் ஸ்வபாவமாகவே இருக்கிறதோ, அம்மாதிரியே இந்தச் சாமான்ய தர்மங்கள் எல்லாம் ஸ்வபாவமாகவே இருப்பதினால் அவைகள் ஈசுவரனுடைய சொரூபம்தான். இவ்விதம் தர்ம ஸ்வரூபமாக ஈச்வரனைப் பார்த்து ராகத்வேஷங்களை தர்மத்திற்கு உட்படுத்தி அவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும். ராகத்வேஷங்களை அனுபவிக்கும் வழிகள் நேர்மையாக இருக்க வேண்டும். இதுவே 'யோக கர்மஸு கௌசலம்' எனப்படும்.

விசேஷ தர்மங்கள்:

இதுவரை சொன்னது சாமான்ய தர்மங்களைப் பற்றியது. இது எல்லோராலும் தாரதம்யமின்றிக் கடைப்பிடிக்கப்பட வேண்டியது. 'விசேஷ தர்மம்' சூழ்நிலைகளுக்கும், பாத்திரங்களுக்கும், உறவுகளுக்கும் ஏற்றாற் போல் ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய சில தர்மங்கள் இருக்கின்றன. இது விசேஷ தர்மம் எனப்படும். உபாத்தியாயர் என்றால் அவருக்கு ஒரு விசேஷ தர்மம் உண்டு. வித்யார்த்தி என்றால் அவனுக்கு ஒரு விசேஷ தர்மம். சிநேகிதன் என்றால் ஒரு விசேஷ தர்மம். இப்படிப்பட்ட விசேஷ தர்மங்களும் கர்ம யோகத்தின்கீழ் வருகின்றன. சாமான்ய தர்மங்களைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. அவைகள் இயல்பாகவே நமக்குத் தெரிந்தவை. ஆனால் விசேஷ தர்மங்களை நாம் நம்முடைய விவேக சக்தியைப் பயனபடுத்தித் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த விவேக சக்தி மனிதனுக்கு மட்டுமே இருக்கிறது. இது எப்படி என்று பார்ப்போம்.

நாம் பார்க்கக்கூடிய இந்த உலகங்களையெல்லாம் சிருஷ்டித்த ஈச்வரன் உறங்கிடவில்லை. ஏனென்றால் தினம் சிருஷ்டி, ஸ்திதி, லயம் என்பது நடந்து கொண்டே இருக்கிறது. தென்னை மரம் என்றால் தேங்காய்தான் காய்க்கும். பக்கத்தில் புளிய மரம் இருந்தால் அதில் புளியங்காய்தான் காய்க்கும். தேங்காயைப் போலவா புளியங்காய் இருக்கும்? புளியங்காய் புளிப்பாகத்தான் இருக்கும் அது புளிப்பாகத்தான் இருக்க வேண்டும். இது இது இவ்விதம் இருக்க வேண்டும் என்ற நியதி உள்ளது. அவைகள் அவ்விதம்தான் இருக்கின்றன. மிருகங்களைப் பார்க்கும்

போதும் அவைகள் எவ்விதம் சிருஷ்டிக்கப்பட்டனவோ அவ்விதமே இருக்கின்றன. எருமை எருமையாகவே நடந்து கொள்கிறது அதை "வேகமாகப்போ" என்ருல் போகுமா? குரங்கைச் "சும்மா இரு" என்ருல் இருக்குமா? ஒவ்வொருமிருகமும் அதன் ஸ்வபாவப்படித்தான் இருக்கும். இதெல்லாம் ஈச்வர சிருஷ்டிதான்.

மிருகங்கள், பக்ஷிகள், விருக்ஷங்கள் எல்லாமே அதன் அதன ஸ்வதர்மத்தில்தான் இருந்து கொண்டிருக்கின்றன. மனிதனுக்குத்தான் இதில் கஷ்டம். ஏனென்ருல் ஸ்வதந்த்ரம் என்ற ஒன்றை இறைவன் மனிதனுக்குக் கொடுத்திருக்கிருன். ஆகையினுல் இவனுக்கு விவேகம் செய்யும் சக்தி இருக்கிறது. இதனால் இவன் ஒரு காரியத்தைச் செய்யவும் செய்யலாம். செய்யாமலும் இருக்கலாம். அல்லது வேறு விதமாகவும் செய்யலாம். இந்த ஸ்வதந்த்ரம் இருப்பதால் இவன் தர்மா தர்மங்களைத் தெரிந்து கொண்டு அதன்படித்தான் காரியங்களைச் செய்யவேண்டும். இதனுல்தான் சாப்பிடுவது முதலானதிலிருந்து இவன் விவேகம் செய்ய வேண்டியதாக இருக்கிறது. எதைச் சாப்பிடுவது எதைச் சாப்பிடக்கூடாது என்பது முதல் இவன் எல்லாவற்றையும் விவேகத்தினுலும் அனுபவத்தினுலும் தெரிந்து கொள்ள வேண்டும். எந்த எந்தக் காரியங்களைச் செய்யலாம், எவைகளைச் செய்யக்கூடாது என்பது தெரிந்து புத்தி பூர்வமாகச் செய்ய வேண்டும். ஆகையால் ராகத்துவேஷத்திற்கு உட்பட்டுக் காரியம் செய்ய முடியாது. நீ ராகத்வேஷங்களைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். ஆனுல் ராகதுவேஷத்திற்கு உட்பட்டு தர்மா தர்மங்களை விடமுடியாது. ஆனுல் ராகத்வேஷத்திற்கு உட்பட்டு தர்மா தர்மங்களை வைத்துத்தான் நீ ராகத்வேஷங்களைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

இதற்கும் முன் சொன்னமாதிரியே செயலை ஒட்டிய கர்ம யோகம் என்று பெயர்.

ஈச்வரார்ப்பண புத்தி:-

உதாரணமாக நமக்குப் பிடிக்காத பாத்திரம் (ரோல்) இருக்கும். அல்லது வேறு ஏதாவது காரியம் செய்ய வேண்டும் என்று தோன்றும். சத் சங்கத்தை எடுத்துக் கொள்வோம். குழந்தைகளை விட்டு விட்டுப் போகலாமா என்றால் அது சரி இல்லை. ஆனால் சத் சங்கத்திற்குப் போக வேண்டும். என்ன செய்வது? குழந்தைகளுக்கு வேண்டிய விதத்தில் ஏற்பாடு செய்து வைத்து விட்டுப் போக வேண்டும். ஆகவே ஒவ்வொரு சூழ்நிலையிலும், புத்தி பூர்வமாக எதைச்செய்ய வேண்டுமோ அதைச்செய்ய வேண்டும். சில சமயங்களில் நாம் சிலவற்றைத் தியாகம் செய்யவேண்டியதாக இருக்கும். சில சமயங்களில் நாம் சில வற்றைச் சுலபத்தில் அடையக் கூடியதாக இருக்கும். அந்த அந்தச் சந்தர்ப்பத்தில் நாம் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யும்போது "இதுதான் என்னால் ஈச்வர சிருஷ்டிக்குக் செய்யக் கூடியது. இது ஈச்வரனுக்கே அர்ப் பணம்" என்று செய்ய வேண்டும்.

ஈச்வரசிருஷ்ட்டியில் நம் பங்கு:-

ஒவ்வொருவருக்கும் ஈச்வர சிருஷ்டியில் ஒரு பங்கு உண்டு. அவ்விதம் பங்கு இல்லை என்றால் நமக்கு நம்முடைய உடல் அங்கங்கள் பல தேவையில்லாதவையே கை கால்கள் எதற்கு? அவசியமில்லையே. நாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருக்க இவைகள் தேவையில்லை. இவ்விதம் இல்லாமல், பகவான் நமக்கு உடல் அங்கங்கள்

எல்லாம் சரியாகக் கொடுத்திருக்கின்றார். இச்சா சக்தி, ஞான சக்தி, க்ரியா சக்தி முதலிய மூன்று சக்திகளைத் தந்திருக்கிறார். இதனால் எல்லோருமே ஈச்வர சிருஷ்டியில் பங்கு எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் இதில் நான், என்னுடைய பங்கு என்ன' என்று தெரிந்து கொள்ள வேண்டும். அந்த அந்தச் சமயத்தில் சூழ்நிலைகளுக்குத் தகுந்த மாதிரி ஒரு பங்கு உள்ளது. அந்தப் பங்கு இந்தச் சமயத்தில் நான் இதைச் செய்ய வேண்டும், என்பதே. எவ்விதம் நாடகத்தில் நடிக்கும் பாத்திரத்திற்கு, இந்த இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்விதம் வசனம் பேச வேண்டும், இவ்விதம் காரியம் செய்யவேண்டும், இவ்விதம் நடிக்க வேண்டும் என்று உள்ளதோ, அதே போல, இந்த உலக மாகிய பெரிய நாடக மேடையில் 'சிருஷ்டி, ஸ்திதி, லயம்' என்னும் மஹத்தான நாடகம் நடந்து கொண்டிருக்கிறது. அதன் டைரக்டர் ஈச்வரன். நாம் எல்லோருமே நடிகர் கள். ஆகையால் நமக்கு அந்த நாடகத்தில் பங்கு உண்டு. அந்தப் பங்கைச் செய்வதே நாம் ஈச்வரனுக்குச் செய்யக் கூடிய அர்ப்பணமாகும்.

ஈச்வரன் நமக்குக் குழந்தைகளைக் கொடுத்திருக் கிறார். அந்தக் குழந்தைகளைப் பெரியவர்களாகச் செய்வது கூட ஈச்வரனுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும். இந்தத் தேகம் நம்மால் செய்யப்பட்டது, அல்ல. அது ஈச்வரனால் கொடுக்கப்பட்டதே. இந்தத் தேகத்தைப் பராமரித்துக் கொள்வதுகூட ஈச்வரார்ப்பணம்தான். எதைத் தள்ள வேண்டுமோ அதைத் தள்ளுவது, எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்வது – இப்படி எல்லாமே ஈச்வரார்ப்பணம் என்று செய்ய வேண்டும். இவ்விதம் வாழ்வில் ஏற்படும் சந்தர்ப்பங்களுக்கேற்றபடி நடித்து

நம்முடைய நற்கர்மாக்களினால் ஈச்வரனை அர்ச்சித்து அந்தக் கரண சுத்தி பெறுவதால் ராகத்வேஷங்களுக்கு உட்படாமல் இருக்க முடிகிறது. இப்போது ராகத்வேஷங்கள் இருந்த போதிலும் அவைகளுக்கு உட்படாமல் தர்மா தர்மங்களின்படி, கார்யங்களைச் செய்யும்போது கொஞ்சம் கொஞ்சமாக ராகத்வேஷங்களிலிருந்து விடுதலையானது ஏற்படுகிறது. இதன் பெயர்தான் கர்மயோகம் என்பது.

முடிவுரை:-

இவ்விதம் கர்மாவைப் பொருத்த இரண்டு இடங்களிலும் ஈச்வரனுடைய சம்பந்தம் வேண்டும். கர்மா செய்யும்போது தர்ம சொரூபமான ஈச்வரனை தர்மாத்யக்ஷகராகப் பார்க்க வேண்டும். கர்மாக்களை ஈச்வரனுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும். அதே மாதிரிக் கர்மபலன் வரும்போதுகூட ஈச்வரனைக் கர்மபல தாதாவாகப் பார்க்க வேண்டும். கர்மபலனைப் பிரசாதமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் இரண்டு வகையிலும் ஈச்வரார்ப்பணம் செய்யும் கர்மயோகிக்கு ராகத்வேஷங்கள் துக்கத்தைக் கொடுக்கும் சக்தியை இழக்கின்றன. ஈச்வரார்ப்பண, பிரசாத புத்திகள் கர்மாவின் கட்டுப்படுத்தும் சக்தியைப் போக்குகின்றன. பாம்பின் பல்லை எடுத்தது போலவும், வறுத்த விதைபோலவும் ராகத்துவேஷங்கள் இருந்த போதிலும், அவைகள் சம்சாரத்திற்கோ, துக்கத்திற்கோ காரணமாக அமைவதில்லை. ராகத்வேஷத்திற்குள்ள சக்தியானது போய்விடுவதால் அவைகள் இவனை ஒன்றும் பண்ணாது. அப்போது மனம் எப்படி இருக்கும்? மனம் சாந்தமாக, ப்ரசன்னமாக இருக்கும்.

மேற்கூறிய இரண்டுவித புத்திகளால் பிரசன்னமும் பக்குவமும் அடைந்த மனமே ஆத்மஞானத்திற்கு ஏற்றது. இவனே ஆத்மஞானத்திற்கு ஏற்ற அதிகாரி. இந்த மனமே அதிகாரித்வம் பெற்றது ஆகையினால் நாம் ஒவ்வொருவரும் சாஸ்திரங்களைப் படித்துக் கொண்டே, ஆத்மாவைப் பற்றிய விசாரத்தைக் கைவிடாமல், அதே சமயத்தில் கர்மாக்களையும் ஈச்வரார்ப்பணமாகப் பிரசாத புத்தியோடு செய்து வந்தால், நாளடைவில் ஞானம் நிலை பெற்று ஜீவன் முக்தி நிலையை அடையலாம்.

:ஓம்:

